# இலகு வரலாறு

## தரம் 9

(புதிய பாடத்திட்டத்திற்கானது)
2010

## பாடங்களும் பயிற்சிகளும்

ஆக்கம்
கமலா குணராசா

மீள்பார்வை
கலாநிதி க. குணராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலகு வரலாறு

## தரம் 9

## 2010

## பாடங்களும் பயிற்சிகளும்

ஆக்கம்:
கமலா குணராசா

மீள்பார்வை:
கலாநிதி க.குணராசா

விற்பனையாளர்:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
யாழ்ப்பாணம் : கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : இலகு வரலாறு தரம் 9
முதலாம் பதிப்பு : ஜனவரி 2010
ஆசிரியர் : திருமதி கமலா குணராசா
மீள் பார்வை : கலாநிதி க. குணராசா
உரிமை : திருமதி கமலா குணராசா
75/10 A, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
வெளியீடு : கமலம் பதிப்பகம், யாழ்ப்பாணம்.
அச்சுப்பதிப்பு : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.
48B, புளுமெண்டால் வீதி, கொழும்பு 13.
விலை : ரூபா. 180 /=

Book : Easy History Grade 9
First Edition : January 2010
Author : Mrs. Kamala Kunarasa
Re-Editing : Dr. K. Kunarasa
Copyright : Mrs. Kamala Kunarasa
75/10 A, Brown Road, Jaffna.
Published : Kamalam Pathippakam, Jaffna.
Price : Rs .180/=
Printed : Unie Arts (Pvt) Ltd.,
48B, Bloemendhal Road, Colombo 13.

**உள்ளடக்கம்** **பக்கம்**

1. அத்தியாயம்: 1
பிரித்தானியரின் இலங்கை வருகையும்
ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளலும் 01
2. அத்தியாயம் 2
இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறையின் வளர்ச்சி 24
3. அத்தியாயம் 3
இலங்கையில் சமய, அரசியல் மறுமலர்ச்சி 33
4. அத்தியாயம் 4
இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் அரசியல் வளர்ச்சி 40
5. அத்தியாயம் 5
குடியேற்ற வாதப் பரம்பல் 56

**விற்பனையாளர்:**
ஸ்ரீலங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம், கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தியாயம் 1

# பிரித்தானியரின் இலங்கை வருகையும் ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளலும்

**1.பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றுவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் எவை?**

(அ) கேந்திர முக்கியத்துவம். இந்து சமுத்திரக் கடற்பாதையின் மத்தியில் இலங்கை அமைந்திருந்தமை முக்கிய காரணமாகும்.

(ஆ) இலங்கையிலிருந்து இந்தியாவினது கிழக்குக் கரையினதும் (மலபார் கரை) மேற்குக் கரையினதும் (கொரமண்டல் கரை) வியாபார நடவடிக்கைகளைக் கவனித்தல் இலகுவாக இருந்தது.

(இ) வடகிழ்ப்பருவக் காற்றுக் காலங்களில் பாதுகாப்பாகக் கப்பல்களை நிறுத்தி வைப்பதற்கு திருகோணமலைத் துறைமுகம் இலங்கையில் காணப்பட்டது. இந்தியாவில் ஆட்சியை அமைத்துக் கொள்வதற்கும் பிரான்சியருடனான போட்டியிலிருந்து இந்துசமுத்திரக் கடலாதிக்கத்தை தமதாக்கிக் கொள்வதற்கும் திருகோணமலைத் துறைமுகம் அவசியமாக அமைந்துள்ளது.

**2. இந்தியாவுக்கு முதன் முதல் வந்த பிரித்தானியர் முதன் முதல் நிறுவிய பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தகக்கம்பனி எந்த இடங்களில் அமைந்தது?**

சென்னை, பம்பாய் (மும்பை), கல்கத்தா (கொல்கத்தா), மசூலிப்பட்டினம், திருவாங்கூர்.

**3. இந்தியாவுக்கு முதன் முதல் வந்த பிரான்சியர் முதன் முதல் நிறுவிய பிரானிசிய கிழக்கிந்திய வர்த்தகக்கம்பனி எந்த இடங்களில் அமைந்தது?**

பாண்டிச்சேரி, காரைக்கால், சந்திரநாகூர்

**4. பிரித்தானியர் வியாபாரத்தில் ஈடுபட ஆவல் கொண்டமைக்குக் காரணம் யாவை?**

(அ) ஐரோப்பாவுக்கு கொண்டு செல்லப்பட்ட கறுவாவில் இலங்கைக் கறுவா முக்கியத்துவம் பெற்றிருந்தமை.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(ஆ) கீழைத்தேச வர்த்தகத்தின் மூலம் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் பெற்று வந்த இலாபத்தை தமதாக்கிக் கொள்ளும் பேராசை.

(இ) மிளகு, ஏலம், கராம்பு, முத்து, மாணிக்கம், யானைத்தந்தம் போன்ற வர்த்தகப் பொருட்கள் இலங்கையில் கிடைத்தமை.

## 5. இலங்கை பிரித்தானியர் வசமானது எப்படி?


ஆங்கிலேயப் படை வீரர்கள் ஒல்லாந்தரின் கோட்டைகளுள் பணியாற்ற ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது. பிரான்சியப் புரட்சி ஏற்பட்ட காலத்தில் ஒல்லாந்தின் மன்னனாக இருந்த வில்லியம் என்பார் பிரித்தானியாவில் அடைக்கலம் புக நேர்ந்தது. அதனைப் பயன் படுத்திய ஆங்கிலேயர், இலங்கைத் துறைமுகங்களை பிரான்சியரிடமிருந்து பாதுகாப்பதற்குரிய அனுமதியைத் தமக்குத் தருமாறு வில்லியத்திடம் கோரினர் வில்லியமும் பாதுகாப்புக்காக ஆங்கிலேயரின் படைகளை இலங்கையில் அனுமதிக்குமாறு கடிதம் ஒன்றை இலங்கையிலிருந்த வான் அஞ்சல் பீக்கிற்கு அனுப்பிவைத்தான். அதனை விரும்பாவிட்டாலும் மன்னனின் கட்டளையை ஏற்று, ஒல்லாந்தரின் வீரர்களின் எண்ணிக்கையிலும் குறைந்த எண்ணிக்கையில் ஆங்கிலேய வீரர்களை திருகோணமலை ஒஸ்ரன்பேர்க் கோட்டையிலும், நீர்கொழும்பு, களுத்துறை, மாத்தறை முதலான கோட்டைகளிலும் ஒல்லாந்த வீரர்களுடன் தங்கவைத்தான். ஒரு கட்டத்தில் ஒல்லாந்த மன்னன் வில்லியத்தின் கட்டளையை ஏற்க மறுத்து, பத்தேவியாவிலிருந்த ஒல்லாந்தக் குடியரசுக்கு விசுவாசம் காட்டினர். அதனால் ஒல்லாந்தர் மீது ஆங்கிலேயர் படையெடுக்க நேர்ந்தது.

## 6. பிரித்தானியர் கரையோரங்களைக் கைப்பற்றியவற்றை விபரிக்க.

ஒல்லாந்தரின் கடற்கரைப் பட்டினங்கள் ஆங்கிலேயரால் ஒவ்வொன்றாகக் கைப்பற்றப்பட்டன. 1795 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து, நவம்பர் மாதத்திற்குள் திருகோணமலையிலுள்ள பிரடெரிக் கோட்டையும் ஒஸ்ரென்பேர்க் கோட்டையும அதே போல மற்றும் மட்டக்களப்பு, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கற்பிட்டி முதலான கோட்டைகள் கைப்பற்றப்பட்டு ஆங்கிலேயர் வசமாகியது. ஆங்கிலேயரிடம் தொடர்ச்சியாக ஒல்லாந்தர் தம் வசம் இருந்த பகுதிகளை இழந்து வருவதைக்கண்ட வான் அஞ்சல் பீக் ஆங்கிலேயரிடம் அனைத்தையும் ஒப்படைத்து விட்டு கொழும்புக்கு வந்து சேருமாறு கட்டளையிட்டான் 1796 இல் கொழும்பையும் எதிரின்றி ஆங்கிலேயரிடம் ஒப்படைக்க நேர்ந்தது. ஒல்லாந்தரின் ஆட்சி இலங்கையில் அஸ்தமித்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. 1797 இல் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பிரித்தானிய வர்த்தகக் கம்பனிக்கு எதிராக ஏன் கிளர்ச்சி ஏற்பட்டது?**




(அ) வரிகளை அறவிட புதியமுறை அறிமுகமாகியது. இந்திய முறையில் அவுமில்தார்கள் எனப்படும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர்.

(ஆ) பொருட்களுக்குப் பதிலாகப் பணமாக அறவிட முயன்றமை. பணப் புழக்கமின்மையால் இடர்ப்பாடு ஏற்பட்டது.

(இ) வரி அறவிடும் உரிமை அவுமில்தார்களுக்கு ஏல மூலம் தரப்பட்டது. ஏல முறை வரி அறவிடல் அறிமுகமாகியமை.

(ஈ) புதிய வரிகளாக தென்னைமரவரி, மீன்வரி, உப்புவரி, கள்வரி, சாராயவரி, புகையிலைவரி என்பன விதிக்கப்பட்டன. இவற்றை மக்களும் பதவி மாற்றப்பட்ட வரி அறவிடுமதிகாரிகளும் விரும்பவில்லை.

**8. இக்கிளர்ச்சியை அடக்க நியமிக்கப்பட்ட மியூரன் குழுவின் முன் வைக்கப்பட்ட பிரேரணைகள் யாவை?**

(அ) ஏலவிற்பனை வரி முறை நீக்கப்படவேண்டும்.'

(ஆ) புதிதான வரிகள் நிக்கப்படல் வேண்டும்.

(இ) அவுல்தார்களுக்குப் பதிலாக உள்ளூர் வரி அறவிடல் அதிகரிகள் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஈ) பணத்தின் மூலம் வரி அறவிடக் கூடாது.

**9. ஆங்கிலேயரின் நிர்வாகம் எப்படியிருந்தது?**

இலங்கையின் நிர்வாகத்தில் இரட்டைஆட்சி முறையில் ஆரம்பத்தில் கைக்கொள்ளப்பட்டது. இலங்கையைக் கைப்பற்ற ஆரம்பத்தில் முழுமூச்சாக. கிழக்கிந்திய வர்த்தக சங்கம் முன்னின்றது. அதனால் இலங்கையின் நிர்வாகம் தங்களால் மேற்கொள்ளப்பட வேண்டுமென கிழக்கிந்திய வர்த்தக சங்கம் விரும்பியது. அதேவேளை 1797 ஆம் ஆண்டு இலங்கையை ஆங்கிலேய முடிக்குரிய நாடாக்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன்



பிரெடறிக் நோத்



பிரௌன்றிக்

தீர்மானிக்கப்பட்டது. அதனை கிழக்கிந்திய வர்த்தக சங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் வர்த்தகம், இறைசார் நிர்வாகம் என்பவை கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினாலும் படைப்பாலனம், குடியியல் நிர்வாகம், நீதிபரிபாலனம் என்பவை முடியினாலும் நடாத்துவதாக முடிவு செய்யப்பட்டது. எனவே கிழக்கிந்திய வர்த்தக சங்கமும் மன்னனும் இலங்கை நிர்வாகத்தை நடாத்தினர். இதனையே இரட்டை ஆட்சி என்பர்.

10. **இலங்கையின் முதலாவது தேசாதிபதி குறித்துக் கூறுக.**

இலங்கையின் முதல் ஆள்பதியாக 1798 ஆம் ஆண்டு பதவி ஏற்றவர் பிரடெரிக் நோர்த் ஆவார். இவரே இரட்டை ஆட்சி முறையை வழி நடாத்தினார். இவர் கரையோரப் பிரதேசங்களை ஐந்து மாவட்டங்களாகப் பிரித்தார். அவை கொழும்பு, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு - முல்லைத்தீவு என்பனவாம். இந்த ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு கலெக்டரை நியமித்தார். கச்சேரி முறை நடைமுறைக்கு வந்தது. கலெக்டருக்குக் கீழ்' அத்துப்பத்து முதலியார் என்பவர் அதிக அதிகாரத்துடன் பதவி வகித்தார். கலெக்டர் பிரிவு கோறளைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கோறளைக்கும் ஒவ்வொரு முதலியார் பொறுப்பாகவிருந்தார். கோறளைகள் ஒவ்வொன்றும் பற்றுகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கு ஆராய்ச்சிகளும் (மணியக்காரர்), பற்றுக்கள் கிராமங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றுக்கு விதானைமாரும் பொறுப்பாக இருந்தனர். வன்னிப்பகுதிகளில் வன்னியர்களும் பொறுப்பாக இருந்தனர். 1834 இல் கலெக்டருக்குப் பதிலாக அரசாங்க அதிபர் எனப் பெயர் மாற்றப்பட்டது. காலகதியில் இலங்கை ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. புத்தளத்தைத் தலைநகராகக் கொண்டு வட மேற்கு மாகாணம், அனுராதபுரத்தைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைநகராகக் கொண்டு வடமத்திய மாகாணம், வதுளையைத் தலைநகராகக் கொண்டு ஊவா மாகாணம், இரத்தினபுரியைத் தலைநகராகக் கொண்டு சப்பிரகமுவா மாகாணம் என்பன புதிதாக அமைந்தன.

**11. இரட்டை ஆட்சி முறைத் தோல்விக்குப் பின்னர் யாது நிகழ்ந்தது?**

இரட்டை ஆட்சி முறை நன்கு செயற்படவில்லை. பிரச்சினைகள் தோன்றின. அதனால் 1802 ஆம் ஆண்டு இரட்டை ஆட்சி முறை நீக்கப்பட்டு இலங்கை முடிசார் குடியேற்ற நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. நோர்த் இலங்கையின் தனி நிர்வாகியாக மாறினார். இதனை ஒற்றையாட்சி என்பர். அரசனுக்கு, வேதனம் பெறாது பண்டை நாளிலிருந்து பணியாற்றி வருவதை இராஜகாரியம் என்பர். இதனை அடிமை முறையெனக்கருதி நோர்த் இல்லாது ஒழித்தார். ஆபரண வரியையும் புதிதாக அறிமுகப்படுத்தினார். அவை நோர்த்துக்குப் பாதகமாக அமைந்தன.

**12. பிரெடரிக் நோர்த் ஆளுநரின் சீர்திருத்தங்கள் எவை?**

(அ) உயர் நீதிமன்றங்களை அமைத்தார்.
(ஆ) குடியியல் வழக்குகள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றுகளை அமைத்தார்.
(இ) இராசகாரிய முறையை நீக்கினார்.
(ஈ) நில அளவைத்திணைக்களம், பொதுவேலைப்பகுதி, தபால் திணைக்களம் என்பனவற்றை நிறுவினார்
(உ) வைத்தியசாலைகளை அமைத்தார்.

**13. தோமஸ் மெயிற்லண்டின் ஆட்சி எவ்வாறிருந்தது?**

1805 ஆம் ஆண்டு சேர் தோமஸ் மெயிற்லாண்ட் என்பார் ஆள்பதியாகப் பதவி ஏற்றார். இவர் மீண்டும் இராஜகாரிய முறையை அறிமுகப்படுத்தினார் கத்தோலிக் மதத்துக்கு எதிராக்க கைக்கொள்ளப்பட்ட தண்டச்சட்டங்களை நீக்கி பூரணமான மதச் சுதந்திரத்துக்கு வழிஅமைத்தார். கொழும்பு, யாழ்ப்பாணம், காலி, திருகோணமலை – மட்டக்களப்பு, புத்தளம் - சிலாபம் என ஐந்து மாகாணங்களாகப் பிரித்தார்.

**14. மெயிற்லண்டின் பின்னர் யாவை நிகழ்ந்தன?**

அவரின் பின்னர் 1812 இல் சேர் றொபேட் பிறவுண்றிக் என்பார் ஆள்பதியாக இலங்கைக்கு வந்தார். அவருடைய காலத்தில் கண்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்றப்பட்டு இலங்கை முழுவதும் ஆங்கிலேயரின் ஆட்சிக்குட்பட்டது. கண்டி உடன்படிக்கையும் பிறவுண்றிக்கால் செய்யப்பட்டது. அவருக்குப் பின்னர் சேர் எட்வேர்ட் பாண்ஸ் இலங்கையின் ஆள்பதியாக அமைந்தார். பாண்ஸ் காலத்தில் பல வீதிகள் அமைக்கப்பட்டன. கோப்பிச்செய்கை, தென்னஞ்செய்கை என்பனவற்றின் அபிவிருத்திகள் நடைபெற்றன.

## 15. இராஜாதி இராஜசிங்கன் யார்?

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுக்குப் பிறகு அவனது சகோதரனான இராஜாதி இராஜசிங்கன் கண்டியின் அரசனானான். அவன் கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனுடன் இலங்கைக்குச் சிறுவனாக வந்து கண்டியில் சிங்களக் கல்வி நிலையங்களில் கற்றிருந்தான். அவன் மன்னனாவதைச் சிங்களப்பிரதானிகள் ஏற்றுக்கொண்டனர். ஆனால் பிரதானிகளில் எவர் மகா அதிகாரிப் பதவியை ஏற்பதென்பதில் பிரதானிகளிடையே பிணக்குகள் காணப்பட்டன. நாயக்க மன்னர் அரியணையிலமர்ந்த காலத்திலிருந்து சிங்களப் பிரதானி ஒருவரே அதிகாரங்கள் பலவற்றைக் கொண்ட மகா அதிகாரியாக இருந்து வந்தான். அவ்வேளை கண்டி இராச்சியத்தின் மகா அதிகாரியாக விளங்கியவன் பிலிமத்தலாவை என்பவனாவான். கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் மரணமானதும் நாயக்க மரபை ஒழித்துவிட்டு கண்டி மரபை ஆட்சியில் அமர்த்துவேன் என்று தானே அரசனாக முயன்றான். ஏனைய பிரதானிகள் அதற்கு ஒப்புதல் வழங்காமையால் தோல்வியில் முடிந்தது. மன்னன் இறந்ததும் அடுத்த உரிமையாளனைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பிரதான அதிகாரியைச் சார்ந்ததாகும் பிலிமத்தலாவை ஒன்றிற்கு மேற்பட்ட திசாவனிகளுக்குப் பொறுப்பாக இருந்தான். அவனுடைய மூத்த சகோதரன், பிலிமத்தலாவைக்கு முன் அப்பதவியிலிருந்தான். இரண்டாவது மகா அதிகாரியாக இப்போது பிலிமத்தலாவையின் மருமகன் இருந்தான். கண்டி இராச்சியத்தில் மிகுந்த பணப்பலம் வாய்ந்தவனாக பிலிமத்தலாவை விளங்கினான்.

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கனின் பின்னர் அவனது சகோதரனான இராஜாதி இராஜசிங்கன் முடிதரித்துக் கொண்டான். இராஜாதி இராஜசிங்கனுக்கு நான்கு மனைவியர் இருந்தனர். அவர்களில் இருவர் சகோதரிகள். மூத்த மனைவியருக்கு முத்துச்சாமி, புத்தாசாமி, கண்ணுச்சாமி, சின்னச்சாமி, அப்புசாமி, ஐயாசாமி, இரங்கசாமி என ஏழு சகோதரர்கள் இருந்தனர். உரிமைப்படி இந்த ஏழு பேரில் ஒருவன் மன்னனாக வந்திருக்க வேண்டும். அவர்களில் முத்துச்சாமி என்பவனுக்குக் கூடிய வாய்ப்பிருந்தது. கடைசி மனைவியர்க்கு கந்தசாமி என்றொரு சகோதரன் இருந்தான். முத்துசாமி என்பவனுக்கு ஆட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது என்று தெரிந்ததும் அவன் யாழ்ப்பாணத்துக்குத் தப்பி ஓடிப்போனான். புத்தசாமியும் கந்தசாமியும் கொழும்புக்கு ஓடி ஆங்கிலேயரிடம் உரிமை கோரி முறையிட்டனர். இராஜாதிராஜசிங்கன் காலமானதும் அவனுடைய சகோதரன் கண்ணுச்சாமி (கந்தசாமி) என்பான் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கன் ஆட்சியை ஏற்றான். நாயக்க வம்ச உரிமைப்படி முத்துச்சாமி என்ற இளவரசனுக்கு ஆட்சியுரிமை போகவேண்டும். ஆனால் கண்டியின் மகா அதிகாரமாக விளங்கிய பிலிமத்தலாவை என்பான் தன் எண்ணப்படி அரசன் நடப்பான் என்பதால் ஸ்ரீவிக்கிரம இராஜசிங்கனை மன்னனாக்கினான்.

கண்டி மன்னனின் ஒத்துழைப்பைப்பெறும் நோக்கமாக ஆங்கிலேயர் றோபேட் அன்றூஸ் என்பவன் கண்டிக்கு அனுப்பப்பட்டான். கண்டி மன்னனைச் சந்தித்த அன்றூஸ் சென்னையிலுள்ள ஆள்பதியுடன் உரையாடி ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்வதற்காக இரண்டு பொறுப்பான தூதுவர்களைத் தன்னுடன் அனுப்பி வைக்கும் படி கோரினான். அவ்வாறு ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. அதில் - ஆங்கிலேயர் கண்டிமீது படையெடுக்க மாட்டார்கள். மீன் பிடிப்பதற்கும் உப்பு விளைவிப்பதற்கும் துறைமுகங்களை கண்டி மன்னன் ஆங்கிலேயருக்கு வழங்கல். வர்த்தகம் செய்வதற்குப் ஆங்கிலேயரின் கப்பல்களைக் கண்டி மன்னன் உபயோகிக்கலாம். இந்த ஒப்பந்தத்தை கண்டிப் பிரதிநிதிகள் ஏற்றுக் கொண்டனர். மன்னனிடம் ஒப்பம் பெறுவதற்கு 1796 ஆம் ஆண்டு அன்றூஸ் சென்றபோது மன்னன் அந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டான். அவ்வேளை ஆங்கிலேய ஆள்பதியாக இலங்கையில் பிறடறிக் நோர்த் என்பான் விளங்கினான்.

**16. பிலிமத்தலாவை குறித்து விபரிக்க.**

கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் அரசசபையில் மகா அதிகாரி பிலிமத்தலாவையின் செல்வாக்கு அதிகமாகவிருந்தது. ஏனெனில் பிலிமத்தலாவை தன் மகளை மன்னனுக்கு திருமணம் செய்து கொடுந்திருந்தான். தன் மகளைப் பட்டத்து ராணியாக்குவான் என்று நம்பியிருந்தான். ஆனால் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனோ அவளை அரண்மனைப் பெண்டிரில் ஒருத்தியாக ஆக்கிக் கொண்டான். பெண் கொடுத்த மாமன் என்று பிலிமத்தாலாவைக்கு உரிய மரியாதையும் செய்யவில்லை. அதனால் பிலிமத்தலாவை நாயக்கப் பிரதானிகள் பலரை அவர்களது பதவிகளிலிருந்து நீக்கினான். பிலிமத்தலாவையின் உள் எண்ணங்களையும் சூழ்ச்சிகளையும் ஓரளவு புரிந்து கொண்ட மன்னன் பிலிமத்தலாவையின் அதிகாரங்களைப் படிப்படியாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைத்தான். அதனால் கோபமுற்ற பிலிமத்தலாவை ஆங்கிலேய நோர்த்துடன் தொடர்பு கொண்டான். தானே கண்டி மன்னனாக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனை அமர்த்தியதாகவும் அந்தச் சிம்மாசனம் தனக்குரியதென்றும் அதனைப் பெற்றுத் தருமாறும் உதவி கோரினான். நோர்த் அவன் கோரிக்கைக்கு இணங்கவில்லை. எனினும் பிலிமத்தலாவையின் உறவை முறித்துக் கொள்ளவும் விரும்பவில்லை. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்கு உண்ணாட்டில் ஆபத்து வரவிருப்பதாகத் தெரிவித்து ஆங்கிலேயப் படை ஒன்றைக் கண்டியில் வைத்திருக்க அனுமதி கேட்டான். அதனை அனுமதிக்காத மன்னன் ஆபத்து வருவதாகவிருந்தால் அது ஆங்கிலேயரால் தான் வரும் என்று பதிலனுப்பினான். கண்டியைக் கைப்பற்றும் எண்ணம் ஆங்கிலேயருக்கு இருந்தது. கண்டி சிம்மாசனத்தில் அமர்ந்து விட வேண்டுமென்ற பேராசை பிலிமத்தலாவைக்கு கடைசி வரை இருந்தது.

அவ்வேளை கண்டி இராச்சியத்தின் இரண்டாவது மகா அதிகாரம் இறந்ததும் இவ்விடத்துக்கு எகெலப்பொலையை அரசன் நியமித்தான். இறந்த அதிகாரத்தின் ஆட்சிப்பகுதியை இரண்டாக்கி மொலிக்கொடை என்பவனுக்கும் ஒரு பகுதியை நிர்வகிக்க நியமித்தான். பின்னர் அப்பதவி ரத்வத்தை என்பானுக்கு வழங்கப்பட்டது. இந்த ஒழுங்கு பிலிமத்தலாவைக்குப் பிடிக்கவில்லை. தன்னை மன்னன் மதிப்பதில்லை எனத் தன் மனக்கிடக்கையை மன்னனிடம் முறையிட்டபோது, 'என்னிடம் நீ ஆணை பெறுவதை விடுத்து, உன்னிடம் மன்னாகிய நான் ஆலோசனை பெற வேண்டும் என நீ விரும்புகிறாய்' என கேலிபுரிந்தான். இவற்றைப் பொறுக்க முடியாத பிலிமத்தலாவை மன்னனை அவன் படுக்கையில் கொல்ல காவல் பணியில் இருந்த மலாய் வீரர்களைத் தூண்டிவிட்டான். அச்சதி வெற்றி பெறவில்லை. ஆங்கிலேய ஆள்பதி நோர்த்துக்கும் கண்டி மன்னனுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டால் தான் கண்டி மீது படையெடுப்பு நடக்கும் எனப் பிலிமத்தலாவை எண்ணினான். முதலில் தன் செல்வாக்கை ஆங்கிலேயருக்கு உணர்த்தும் வகையில் கண்டியில் ஒரு கலகத்தைத் தோற்றுவித்தான். அக்கலகத்துக்குப் பிரதானிகள் பலர் ஆதரவளிக்கத் தவறியதால் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனால் இலகுவில் அக்கலகம் அடக்கப்பட்டது. அவ்வேளையிலும் மகா அதிகாரியான பிலிமத்தலாவையைப் பதவியிலிருந்து நீக்கிவிடத் துணிச்சல் வரவில்லை.

கண்டி இராச்சியத்துக்கு ஆங்கிலேயரின் பிரதேசங்களிலிருந்து சோனக வியாபாரிகள் உப்பு, கருவாடு, புகையிலை, துணிவகை முதலான பொருட்களை எடுத்து வந்து கண்டியிலுள்ள பாக்கு, கறுவா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றுக்குப் பண்டமாற்றுச் செய்து அங்கிலேயருக்கு விற்பது வழக்கமாகும். சோனக வியாபாரிகள் பாக்குடன் திரும்பிக் கொண்டிருக்கையில் பிலிமத்தலாவையின் ஆட்கள் கொள்ளையடித்தனர். ஆங்கிலேய ஆள்பதி கண்டி மன்னினிடம் கொள்ளையடிக்கப்பட்ட பாக்குகளுக்கு நட்ட ஈடு கொடுக்க வேண்டுமென வற்புறுத்தினான். மன்னன் நட்ட ஈடு கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் அதனை ஒரு சாக்காக வைத்து ஆள்பதி நோர்த் கண்டி மீது 1803 ஆம் ஆண்டு படையெடுத்தான். மக்டோவலின் தலைமையிலிருந்து 1700 வீரர்களைக் கொண்ட ஒரு படை கொழும்பிலிருந்தும், கப்டன் பாபுட் தலைமையில் 1200 போர்வீரர்களைக் கொண்ட ஒரு படை திருகோணமலையிலிருந்தும் கண்டி நோக்கிப் புறப்பட்டன. கண்டி கைப்பற்றப்பட்டது. விக்கிரம இராஜசிங்கன் ஹங்குரான்கெற்றைக்குத் தப்பி ஓடினான். தன்னைக் கண்டியின் அரசனாக்கும் படி பிலிமத்தலாவை கோரியபோது அதனை நிராகரித்த ஆங்கிலேயர், தங்களிடம் ஏற்கனவே அடைக்கலம் புகுந்திருந்த முத்துசாமியை கண்டியின் அரசனாக்கினர். தப்பியோடிய ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைப் பற்றி எதுவித கவலையும் கொள்ளாது முத்துசாமியை அரசனாக்கினர்.

ஆங்கிலேயரின் படையெடுப்பு ஒரு மழைக்காலத்தில் நடந்தேறியது. கண்டியில் மழைக்காலம் ஆரம்பித்தது. கொழும்பு – கண்டிப் பாதை துண்டிக்கப்பட்டது. போர் வீரர்களுக்கு உணவுப் பொருட்கள் அனுப்ப முடியாமல் போனது. அத்துடன் காட்டுச் சுரம் வீரர்களைப் பீடித்துக் கொண்டது. அதனால் 8000 வரையிலானவர்கள் இறந்து போக நேர்ந்தது. கப்டன் பாபுட்டும் காட்டுச் சுரத்தால் பாதிக்கபப்ட்டு கொழும்பு திரும்பினான். படைநடத்தி வந்த மக்டோவல் தன் பொறுப்பை மேயர் டேவி என்பானிடம் ஒப்படைத்துவிட்டு கொழும்பு திரும்பி போர்வீரர்களின் இக்கட்டை எடுத்துரைத்தான். உடனடியாகப் படைகளைத் திருப்பி அழைக்க ஆள்பதி நோர்த்திடம் அனுமதி கோரினான். முதலில் மறுப்பளித்த நோர்த் பின்னர் இணங்கினான். இந்நேரத்தில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் ஆங்கிலேயரைச் சுற்றி வளைத்து, எஞ்சிய ஆங்கிலேய வீரர்களைக் கண்டியிலிருந்து வெளியேற விடுவதாயின் அவர்கள் வசமுள்ள அரசனாக்கப்பட்ட முத்துசாமியையும், அவன் தம்பி கந்தசாமியையும் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என படைத்தளபதி டேவிக்கு அறிவித்தான். வேறு வழியின்றி முத்துசாமியையும் கந்தசாமியையும் டேவி மன்னனிடம் ஒப்படைத்தான். அவர்கள் இருவரும் உடனடியாகச் சிரச்சேதம் செய்யப்பட்டனர். அதற்குப் பின்னரும் மன்னன் தன் வாக்குறுதியைக் கடைப்பிடிக்கவில்லை. ஆங்கிலேயப் படைவீரர்களைத் தாக்கினான். நோயுற்றிருந்த வீரர்களையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை செய்வித்தான். கைதாகிய ஆங்கிலேயர்களை இவ்விருவராகப்பிணைத்து, மூளை நொறுங்க அடித்துக் கொல்வித்தான். மேயர் டேவியும் ஏராளமான வீரர்களும் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். மேயர் டேவி சிறையிலேயே இறக்க நேர்ந்தது. ஆங்கிலேயரின் 1803 ஆம் ஆண்டுப் படையெடுப்பு தோல்வியில் முடிந்தது. அப்படையெடுப்பில் ஒரே ஒரு வீரன் மட்டும், பாண்ஸி என்பவன், இறந்தவன் மாதிரிக் கிடந்து தப்பி வந்து நோர்த்திடம் நடந்தவற்றை முறையிட்டான். ஆள்பதி நோர்த்தின் அவசர முடிவும் சாதகமற்ற மலைநாட்டின் காலநிலையும் தோல்விக்குக் காரணங்களாகின.

1803 ஆம் அண்டு ஆங்கிலேயருக்கும் கண்டிக்கும் நடந்த யுத்தத்தில் பிலிமத்தலாவை நடந்து கொண்ட முறை விக்கிரம இராஜசிங்கனுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது. தன்னைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டப்பட்டதையும் தெரிந்து கொண்டான். அதனால் உடனடியாக பிலிமத்தலாவையும் அவனோடு ஆறு தலைவர்களையும் பிடித்துச் சிரச்சேதம் செய்வித்தான். ஆங்கிலேயப் படைவீரர்களைக் கிலி கொள்ள வைக்கும் அறிவித்தல் ஒன்றையும் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் வெளியிட்டான். ஆங்கிலேயனின் தலையொன்றைக் கொண்டு வருபவர்களுக்கு பத்து ரூபா வீதமும், ஆங்கிலேப்படையிலுள்ள சுதேசிகளின் தலையைக் கொண்டு வருபவருக்கு ஐந்து ரூபா வீதமும் சன்மானம் தரப்படும் என அறிவித்தான். அதனால் ஆங்கிலேயப் படையிலிருந்து சுதேசிகள் விலகிவிட நேர்ந்தது. மலாய வீரர்கள் மன்னன் பக்கம் சேர்ந்தனர்.

## 17. எகெலப்பொலை என்பவன் யார்?

ஆள்பதி நோர்த்தின் பின்னர் சேர் தோமஸ் மெயிற்லான்ட் என்பவரும், அவருக்குப்பின்னர் 1812 இல் சேர் றொபேட் பிறவுன்றிக்கும் இலங்கையின் ஆள்பதிகளாக அமர்ந்தனர். மெயிற் லான்ட்டின் காலம் அமைதியான காலமாக இருந்தது. அவரின் வேண்டுகோளுக்கிணங்க விக்கிரம இராஜசிங்கன் தன் சிறையிலிருந்த ஆங்கிலேயக் கைதிகளில் 300 பேரை விடுதலை செய்தான். 1812 இல் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் எதிர்பார்த்திருந்த காலம் கனிந்தது. அத்துடன் தனக்கு எதிராக பிலிமத்தலாவையுடன் இணைந்து சதி செய்ததாக கருதி, சதியில் சம்பந்தப்படாதிருந்த சிங்களத் தலைவர்கள் பலருக்குக் கடுந்தண்டைகள் விதித்தான் அத்தலைவர்கள் வகித்த பதவிகளைத் தன் நாயக்க உறவினர்களுக்கு வழங்கினான். அயலர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்தான். சில பிரதானிகளிடையே காணப்பட்ட முரண்பாடுகளைத் தன் நலனுக்குப் பயன்படுத்திக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிமத்தலாவையின் மகா அதிகாரிப் பதவிக்கு இன்னொருவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பிரதான 'பிரதானிகளுக்குரியதாகும். அதனால் பிரதானிகள் எகெலப்பொலை என்பானை மகா அதிகாரியாகத் தெரிவு செய்தனர். அத்தெரிவில் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனுக்கு உடன்பாடில்லை. என்றாலும் பிரதானிகள் தெரிவு செய்ததால் அமைதி காத்தான். அதேவேளை இரண்டாவது மகா அதிகாரி மீகஸ்தனை என்பான் இறந்ததும், அந்தவிடத்துக்கு எகெலப்பொலைக்குப் பகைவனான மொல்லிக்கொடை என்பானை நியமித்தான். இவை காரணமாக ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் பிரதானிகளின் அதிருப்தியைச் சம்பாதித்துக் கொண்டான். மேலும் அரசசபையிலிருந்த அதிகாரம் என்ற பதவியை இரண்டிலிருந்து மூன்றாக்கினான். அதற்குத் தனக்குச் சொந்தமான ஒருவனை நியமித்தான். பிரதானிகளின் அதிகாரங்களைக் குறைக்க நடவடிக்கைகள் எடுத்தான். பெரும் செல்வாக்கோடிருந்த பிரதானிகள் செல்வாக்கை மட்டுப்படுத்த விரும்பினான். சபையிலிருந்த பிலிமத்தலாவை, எகெலப்பொலை ஆகிய பிரதானிகளின் உறவினர்களையும் ஆதரவாளர்களையும் பிரதானிகள் அந்தஸ்திலிருந்து நீக்கினான். வம்சாவளி மூலம் பதவி அளிக்கும் முறையை நீக்கினான். வயதில் குறைந்தோரை அதிகாரிகளாக்கினான் நாயக்க உறவினரைத் திசாவைக ளாக்கினான். தனது மகன் முறையானவனும் இராஜாதி இராஜசிங்கனின் மகனுமான மாம்பிட்டிய பண்டாரா என்பவனைக் கூட அரசுக்குத் துரோகம் செய்தான் எனக் குற்றம் சாட்டி மரணதண்டனை அளித்தான்.. இவற்றின் விளைவாக கண்டியிலிருந்து 500 உக்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர நேர்ந்தது. இவற்றால் அதிருப்தியடைந்த பிரதானிகள் எகெலப்பொலையின் தலைமையில் ஒன்று சேர்ந்து ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனைப் பதவியிலிருந்து அகற்றச் சூழ்ச்சி செய்தனர். சபப்பிரகமுவாவில் அரசனுக்கெதிராகக் கலகம் ஒன்று ஏற்பட்டது. மொல்லிக்கொடை தலைமையில் அனுப்பி வைத்த படையால் கலகம் மன்னனால் முறியடிக்கப்பட்டதும், தப்பிச் சென்ற எகெலப்பொலை ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்டதோடு, ஆங்கிலேருடன் சேர்ந்து கொண்டான்.

எகெலப்பொலையின் செயல்களால் ஆத்தரமடைந்த ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் எகெலப்பொலையின் மனைவியையும் பிள்ளளைகளையும் கைதுசெய்து சித்திரவதை புரிந்ததோடு அவர்களுக்கு மரணதண்டனையும் விதித்துக் கொன்றான். பிள்ளைகளின் தலைகளை உரலிலிட்டு தாயைக் கொண்டு இடிப்பித்தான். மாத்தளை திசாவையாக இருந்த எகெலப்பொலையின் உறவினனான புஸ்வெலவையும் அவனது மனைவி, சகோதரி ஆகியோரையும், ஊவாவில் திசாவையாக இருந்த


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

எகெலப்பொலையின் மைத்துனனையும் அவன் மனைவியையும் போகம்பர ஏரியில் அமிழ்த்திக் கொலை செய்வித்தான். தலதா மாளிகைக்குச் சொந்தமான இரண்டு கிராமங்களைப் பறித்துக் கொண்டான். குடனன்சே என்ற பிக்குவையும் சிரச்சேதம் செய்தான். தலதா மாளிகைக்கு அருகில் தேவசங்கிந்த என்றவிடத்தில் பல பிரதானிகளின் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. இரண்டு நாட்களாகக் கண்டி இராச்சியம் அல்லோகல்லோலப் பட்டது. கண்டி மக்கள் துக்கம் ஆனுட்டித்தனர். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் பயங்கரவாட்சி அவனில் வெறுப்பையும் அதிருப்தியையும் அளித்தன. இவை அனைத்தாலும் பிரதானிகள், பிக்குகள், மக்கள் ஆகியோரின் ஆதரவை மன்னன் இழக்க நேரிட்டது.

18. **கண்டி இராச்சியத்தின் தோல்வியை விளக்குக.**

அவ்வேளை ஆங்கிலேயரின் இலங்கை ஆள்பதியாக இருந்த றோபேட் பிறவுன்றிக் கண்டி மீது படையெடுக்க உகந்த காரணத்தை எதிர்பார்த்திருந்தான். கண்டி மீது எக்காரணம் கொண்டும் படையெடுக்க கூடாது என ஆங்கிலேயக் குடியேற்ற நாடுகளுக்கான கவனரின் கட்டளை இருந்தது. ஆனால் பிறவுன்றிக் கண்டி மீது கண்டெடுக்கத் தயாராக இருந்தான். 1803 ஆம் ஆண்டுக் கண்டி யுத்தத்தில் ஆங்கிலேயரை மிலேச்சத்தனமாக ஸ்ரீ விக்கிரம இராஜசியங்கன் நடாத்தியமை அவனால் மறக்க முடியவில்லை. எகெலப்பொலையின் வற்புறுத்தலும் சேர்ந்து கொண்டது. அதே வேளை 1814 ஆம் ஆண்டளவில் கண்டியில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த பதின்மரை ஆங்கிலேய ஒற்றர்கள் எனச்சந்தேகித்து கண்டி அரசனின் அதிகாரிகள் கைதுசெய்தனர். அவர்களின் கரம், மூக்கு, காது போன்ற அவயங்கள் அரிந்து விடுவிக்கப்பட்டனர். அவர்களில் ஏழு பேர் மரணமடைய எஞ்சிய மூவர் ஆள்பதியிடம் நடந்ததை முறையிட்டனர். மேலும் கண்டி மன்னனின் விசுவாசிகள் ஆங்கிலேயரின் ஆள்புலத்துக்குள் இரகசியமாக நுழைந்து குடிசைகளுக்குத் தீயிட்டனர். இவ்விரு காரணங்களையும் சாட்டாகக் கொண்டு கண்டி மீது பிறவுன்றிக் படையெடுக்க யுத்தப் பிரகடணம் செய்தான்.

1815 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆங்கிலேயரின் படை கண்டி நோக்கிப் புறப்பட்டது. பிறுவுன்றிக் தக்கவாறு திட்டமிட்டு படையெடுத்திருந்தான். அவன் இந்தியாவிலிருந்து படை உதவி பெற்றதுடன், கொழும்பு, காலி, அம்பாந்தோட்டை, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கோட்டைகளிலிருந்தும் கண்டியை நோக்கி வீரர்கள் புறப்பட்டு வந்தனர். கண்டியின் மகா அதிகாரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொல்லிக்கொடை தன் ஆதிக்கத்திலிருந்த நான்கு கோறளையைக் கையளித்துச் சரணடைந்தான். பெப்ரவரி 14 ஆம் திகதி எவ்வித எதிர்ப்புமின்றி கண்டி நகரை ஆங்கிலேயர் சென்றடைந்தனர். ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் கண்டியைவிட்டு ஓடி கல்ஹேகவத்தையில் உடுப்பிட்டியே ஆராய்ச்சியின் வீட்டில் ஒளிந்திருக்கும் போது எகெலப்பொலையின் உறவினனான எக்நெலிகொடை நிலாமையால் கைது செய்யப்பட்டு ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டான். 1816 ஆம் ஆண்டு ஸ்ரீ விக்கிரமராஜசிங்கனும், அவனது உறவினர்களான அறுபது பேரும் கொழும்புக்குக் கொண்டு வரப்பபடடு கோர்ண்வலிஸ் என்ற கப்பலில் வேலூருக்கு நாடு கடத்தப்பட்டார்கள். நாடு கடத்தும்போது ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன், ஆள்பதிக்குக் கூறிய வார்த்தைகள்,'எகெலப்போலை விடயத்திலும் மொலிக்கொடை விடயத்திலும் ஜாக்கிரதையாக இருங்கள். அவர்கள் என்னை ஏமாற்றியது போல உங்களை ஏமாற்ற நாள் எடுக்காது' என்பதாகும்.

1815 வரை அந்நியரால் கைப்பற்றப்படாது சுதந்திர இராச்சியமாக இருந்த கண்டியின் சுதந்திரம் பறிபோனது. ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் கொடூரமான செய்கைகள் அனைவரினதும் ஆதரவை இழக்கவைத்தது. நாட்டையும் இழக்க வைத்தது.

## 19. கண்டி உடன்படிக்கை – 1815 யாது?

1815 ஆம் ஆண்டு கண்டியைக் கைப்பற்றியதும் ஆங்கிலேயர் கண்டிப்பிரதானிகளுடன் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டனர். கண்டிய பாரம்பரியம், பழக்க வழக்கங்கள், சட்டதிட்டங்கள் பாதிக்காத விதத்தில் பிரதானிகளுடன் உடன்படிக்கை நடந்தது. கண்டிக்கு உரிமையுடைய ஆட்சியாளன் எவனும் இல்லாததால் கண்டிப்பிரதானிகளுடன் ஒப்பந்தம் நடந்தது. எகெலப்பொலை, மொலிக்கொடை ஆகியோரும் கூட்டத்துக்கு அழைக்கப்பட்டனர். தன்னைக் கண்டிக்குரிய அரசனாக ஆங்கிலேயர் நியமிப்பர் என எகெலப்போலை கடைசி வரை நம்பியிருந்தான். அவன் நம்பிக்கை நிறைவேறவில்லை. சிங்களப்பிரதானிகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் பின்வரும் அம்சங்கள் அடங்கியிருந்தன. முதலாவதாக கண்டியின் அரசுரிமையை ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனும் அவன் உறவினர்களும் இழக்கின்றார்கள். அவர்கள் ஆங்கிலேய அரசின் எதிரிகளாகக் கருதப்படுவதால் அவர்கள் எவரும் கண்டியில் வசிக்க முடியாது. கண்டியைவிட்டு வெளியேறிவிடவேண்டும். இனி வரும் காலத்தில் பிரித்தானிய அரசரே கண்டியின் அரசராகவும் கருதப்படுவார். கண்டி இராச்சியம் பிரித்தானிய அரசனின் முடியாட்சியின் கீழ் கொண்டு வரப்படுகின்றது. பிரித்தானிய மன்னனுக்குப் பதிலாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை முழுவதையும் அவரால் நியமிக்கப்பட்ட ஆள்பதிஒருவர் நிர்வகிப்பார். கண்டிப்பிரதானிகள் இதுவரை அனுபவித்து வந்த சலுகைகள், உரிமைகளை, பதவிகளைக் தொடர்ந்து வகிக்கலாம். சமய சுதந்திரம் பாதிக்கப்படமாட்டாது. பௌத்தமதம், பௌத்த சங்கம், பௌத்த ஆலயங்கள் எதுவித பாதிப்புமின்றி இருந்தவாறே தொடர்ந்து இயங்கலாம். மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் ஆள்பதிக்கேயுரியது. கொடூரமான நாகரிகமற்ற தண்டனைகள் இனி வழங்கக் கூடாது. ஆங்கில நீதிச்சட்டப்படி விசாரித்தே நீதி வழங்கப்படும். கண்டி வியாபாரம் ஆங்கில ஆள்பதியின் எண்ணப்படியே இனிமேல் நடக்கும். இவ்வாறு செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்குப் பிரதானிகள் ஒத்துக் கொண்டனர். இதன் மூலம் இலங்கை இராச்சியம் ஆங்கிலேய முடியாட்சிக்குரியதானது.

## 20. கண்டிக்கலகம் எவ்வாறு ஏற்பட்டது?

1815 ஆம் ஆண்டு உடன்படிக்கையால் எகெலப்பொலை அதிக ஏமாற்றம் அடைந்தான். ஆங்கிலேயர் தனக்கு நிர்வாகத்தில் முக்கிய பங்காவது அளிப்பார்கள் என அவன் நம்பியிருந்தான். எதுவும் நடக்கவில்லை. உடன்படிக்கைசெய்து கொண்ட ஆங்கிலேய தளபதி டீ ஒயிலி என்பானை எகெலப்பொலை சந்தித்துத் தனக்குரிய முக்கியத்துவத்தை வழங்குமாறு வேண்டினான். அவன் கோரிக்கை நிறைவேறாததால் தனது மகா அதிகாரிப் பதவியிலிருந்து விலகிக் கொண்டான்.

கண்டி மக்களின் மனங்களில் ஸ்ரீ விக்கிரமசிங்கன் நாயக்க மன்னன். ஆங்கிலேயர் அந்நியர். ஆகவே கண்டியில் அந்நியராட்சி தான் தொடர்ந்து நடக்கின்றதென்ற உணர்வைக் கண்டிப்பிரதானிகள் ஏற்படுத்தியிருந்தனர். கண்டியில் ஆங்கில நிர்வாகம் தொடங்கி இரண்டு ஆண்டுகளுள் அவ்வாட்சி மீது வெறுப்புற்றனர். மக்களிடமும் பிரதானிகளிடமும் உள்ள ஆயுதங்களைக் கச்சேரிகளில் ஒப்படைக்குமாறு பணிக்கப்பட்டது. அதனால் தமது செல்வாக்குக் குறைவதாகப் பிரதானிகள் கருதினர். பிக்குகளும் ஆங்கிலேயராட்சியில் அதிகளவு கௌரவிக்கப்படவில்லை. ஆங்கிலேயர் புரட்டஸ்தாந்து மதத்தைக் கண்டியில் பரப்புவதால் பௌத்தம் தளரும் எனக் கருதினர். மேலும் சோனக வர்த்தகர்கள் ஆங்கிலேயருடன் நல்ல உறவு கொண்டிருந்தார்கள். அதனால் தமக்கென ஒரு பிரதானியை நியமிக்குமாறு ஆங்கில ஆள்பதியிடம் கோரினார்கள் அக்கோரிக்கை ஏற்கப்பட்டு ஹய்ஜி மரைக்காயர் என்பவர் முஸ்லீம் முகாந்திரமாக நியமிக்கப்பட்டார். அச்செயல் கண்டிப்பிரதானிகளிடையே கசப்பைத் தோற்றுவித்தது. புத்தபிக்குவாகவிருந்த வில்பாபா என்பவன் துரைச்சாமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பெயருடன் தான் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் மைத்துனன் எனப் பிரகடனப்படுத்தி இராச்சியம் தனக்குரியதென்றான். வெல்லசப் பகுதி திசாவையும் அவனை ஆதரித்தார். அவற்றால் கண்டியில் கலகம் ஏற்பட்டது. வில்பாபா என்ற இப்போலிக்காரனைக் கைதுசெய்யும்படி அனுப்பப்பட்ட ஹய்ஜி மரைக்காரும் வீரர்களையும் கலகக்காரர் கைதுசெய்தனர். அவர்களை விடுவிக்குமாறு ஆங்கிலேயர் ஊவாப்பகுதியின் திசாவையாக இருந்த கெப்பிற்றிப்பொலை என்பானை அனுப்பினர். சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்த கெப்பிற்றிபொலையும் அவன் வீரர்களும் கலகக்காரருடன் சேர்ந்து கொண்டனர். எகெலப்பொலையும் கலகக்காரருடன் இணைந்து கொண்டான். இவர்களின் தலைமையில் வெல்லச, ஊவாப்பகுதிகளில் கண்டிக்கலகம் வெடித்தது. அக்கலகம் தொடக்கத்தில் வெற்றிபெற்றது போல இருந்தாலும் ஆங்கிலேயரால் அடக்கப்பட்டது. கெப்பிற்றிப்பொலை கைதுசெய்யப்பட்டு 1818 இல் சிரச்சேதம் செய்யப்பட்டான். எகெலப்பொலை கைது செய்யப்பட்டு மொறிஷஸ் தீவுக்கு அனுப்பப்பட்டான். அங்கு அவன் 1829 ஆம் ஆண்டு மரணமானான். அதன் பின்னர் 1818 ஆம் ஆண்டு ஒரு பிரகடனத்தை ஆங்கிலேயர் வெளியிட்டனர் அதன் மூலம் கண்டிப்பிரதானிகளின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன. பிரதானிகளுக்கு வேதனமாகப் பணம் கொடுக்கும் முறை கைக்கொள்ளப்பட்டது. கண்டியில் பௌத்த மதம் தவிர ஏனைய மதங்களையும் மக்கள் கைக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது. தடையில்லாத வர்த்தகத்துக்கு இடைஞ்சலாக விளங்கி சுங்கவரி விதிக்கும் பதினான்கு கடவைகளும் அகற்றப்பட்டன. ஒரே நாடாக இலங்கை ஆங்கிலேயரால் கருதப்பட்டது.

## 21. வில்மட்ஹோட்டனின் நிர்வாகம் எப்படி இருந்தது?

1831 அல் சேர் றொபேட் வில்மட் ஹேட்டன் என்பவர் இலங்கையின் ஆள்பதியாக வந்தார். அவர் காலத்தில் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தியடைந்தது. குதிரைவண்டிகள் (தபால் கோச்சு) தபால் சேவையை அறிமுகப்படுத்தினார். இலங்கை சேமிப்பு வங்கியை தாபித்தார். வீதிகள் பல அமைத்தார். 'கொழும்பு ஜேர்னல்' என்ற பத்திரிகையை வெளியிட்டார். அவர் காலத்தில் 'சிலோன் குறோனிக்கல்', சிலோன் ஹெரல்ட்', 'ரைம்ஸ் ஒப் சிலோன்' முதலான பத்திரிகைகள் வெளிவந்தன.

## 22. விடுதலைப் போராட்டங்கள் எவ்வாறு எழுந்தன?

1847 இல் பிரபு றொறிங்டன் இலங்கையின் ஆள்பதியாக இருந்தார். அவர்காலத்திலி 1848 இல் இலங்கையில் ஆட்சியாளருக்கு எதிராக் கலகம் ஒன்று ஏற்பட்டது. புதிதான வரிகளை மக்கள் வெறுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகம் மூண்டது. புரான் அப்பு, கொடபண்டா என்போர் இக்கலகங்களுக்குத் தலைமைதாங்கினர். ஆங்கேலர் 'மார்ஷல் லோ' (கண்டவிடத்தில் கொல்லல்) மூலம் கலகத்தை அடக்கினர். வாரியப்பொலையில் 40 கலகக்காரரும், மாத்தளையில் 200 கலகக்காரரும், சுட்டுக் கொல்லப்பட்டனர். குட்டபொல உனன்சே என்ற பிக்குவும் சுட்டுக் கொல்லப்பட்டார். புரான் அப்பு, கொடபண்டா என்போர் சுடப்பட்டனர். கலகம் அடக்கப்பட்டது. ஆள்பதி தனது பதவியைத் துறந்து இங்கிலாந்து சென்றார். அவரிடத்தில் பிரபு ரொறிங்டன் ஆள்பதியானார். அவருக்குப்பின்னர் வந்த ஆள்பதிகள் பெருந்தோட்ட விருத்தியிலும் நெற்செய்கை விருத்தியிலும் கூடிய கவனம் செலுத்தினர். பொது மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் ஆதரவைப் பெற முயன்றனர். மன்ரிங், டொனமூர், சோல்பரி, ஆகியோரின் நயவுரைகள் இவ்வாறானவையாம்.

## 23. போராட்ட வீரர்கள் யார்?,

வீர புரன் அப்பு, கடஹபொலதேரர், கொங்காலே கொட பண்டா

## 24. பௌத்த கத்தோலிக்க கலவரம் எவ்வாறு நிகழ்ந்தது?

அவர் காலத்தில் 1883 இல் கொழும்பு நகரின் தெருக்களில் பௌத்தரும் கத்தோலிக்கரும் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுள்ளனர். இலங்கையில் சிங்களவரல்லாத சிறுபான்மையினர் 26% ஆகவும், பௌத்தரல்லாதோர் 36 சதவீதமாகவும் உள்ளனர். கடந்த நூறு வருடங்களில் சிங்களவரல்லாதோர் பௌத்தரல்லாதோர் என்றெல்லாம் அழைக்கப்பட்டோருக்கு எதிராக வன் செயல்கள் ஏவிவிடப்பட்டன. இலங்கையில் பௌத்தமறுமலர்ச்சி, மதம், கலாசாரம் , மதுவிலக்கு சுலோகங்களைக் கிறிஸ்தவ மதத்திற்கு எதிராக தூண்டிவிட்டது. காலனித்துவ அரசை எதிர்ப்பதற்குப் பதிலாக கிறிஸ்தவ மிஷனரிமாரின் குறைகளும் செயல்களுமே எதிர்ப்பிற்குரியதாக இருந்தன. இக்கிறிஸ்தவர்களில் பெரும்பாலானோர் ஏழைச்சிங்களவரும் தமிழருமாவர். யதார்த்தமான பிரச்சினைகளிலிருந்த திசை திருப்பப்பட்ட தேசிய உணர்வின் வெளிப்பாடாகவே கிறிஸ்தவ எதிர்ப்பியக்கம் அமைந்தது. 1873 இல் பௌத்த குணாணந்த தேரர் கிறிஸ்தவத்திற்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார். மிஷனிமார் கீழ்த்தர மூட நம்பிக்கைகளைக் கற்பிக்கும் எதிரிகளாகச் சித்திரிக்கப்பட்டனர். அத்துடன் தெருக்களில் நோய் பரப்பும் மூடப்போதகர்களாகச் குற்றம் சாட்டப்பட்டன. 1883 ஆம் ஆண்டு பௌத்தருக்கும் கத்தோலிக்கருக்கும் இடையில் கலவரம் மூண்டது. ஒருவர் இறந்தார். 12 பொலீசாரும் 30 பேரும் காயமுற்றனர். கலவரம் அடக்கப்பட்டது. மொத்தத்தில் பௌத்த சிங்கள தேசிய வாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயராட்சிக்கு எதிராக்கிளம்பாமல், இலங்கையில் வாழ்ந்த சிறுபான்மை மக்களுக்கு எதிராகக் கிளம்பியதை அவதானிக்கலாம். ஆர்தர் ஹாவ்லொக் (1890) காலத்தில் விஞ்ஞானக் கல்வியும், மருத்துவக் கல்வியும், உவெஸ்ற் றிட்ஜ்வே (1896) காலத்தில் புகையிரதப்பாதைகள் பலவும் துறைமுகவிருத்தியும், ஹென்றி பிளாக் (1903) காலத்தில் சீரமைக்கப்பட்ட பொலீஸ் படையும் கிராமத் தலைவர் முறையும், ஹென்றி மக்கலம் (1907) காலத்தில் முதலாவது சட்டசபைக் கூடலும் நடைபெற்றன.

வர்த்தக மேன்மைக்காகவும், இராணுவ பாதுகாப்பிற்காகவும் வீதிகளும் புகையிரதப் பாதைகளும் அத்தியாசியமாகின. 1859 க்குப்பின்னர் கணிசமான வீதிகள் அமைக்கப்பட்டன. சேர் எட்வேட் பான்ஸ் அவ்வகையில் குறிப்பிடத்தக்கவர். மலைநாட்டையும் துறைமுகங்களையும் இணைக்கும் வீதிகள் முதலில் அமைக்கப்பட்டன. கண்டிக்கான முதலாவது புகையிரதப்பாதை 1867 இலும், மாத்தறைக்கான புகையிரதப்பாதை 1895 இலும், கண்டி மாத்தளைப் பாதை 1880 இலும், நுவரெலியாவுக்கான பாதை 1904 இலும், யாழ்ப்பாணத்துக்கான பாதை 1905 இலும், நீர்கொழும்புக்கான பாதை 1907 இலும் அமைக்கப்பட்டன.

ஆங்கிலேயரால் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது பெருந்தோட்டப்பயிர் கோப்பி ஆகும். 1872 வரை கோப்பிச் செய்கை மலைநாட்டில் உச்சமான பயிராக விளங்கியது. பின்னர் இலைச்சுருள் நோய் கோப்பிப் பயிரைத் தாக்கி அழித்தது. அதனால் சிங்கோனாப் பயிர்ச்செய்கையிலீடுபட நேர்ந்தது. அச்செய்கையில் எதிர்பார்த்த இலாபம் கிடையாது போனது. அதனால் அடுத்து தேயிலைச் செய்கையில் கவனம் செலுத்தப்பட்டது. 1841 அல் ஆரம்பித்த தேயிலைச் செய்கை 1903 இல் உச்சமடைந்தது. அதன் முக்கியத்துவம் இன்றும் குறையவில்லை. 1898 இல் றப்பர்ச்செய்கை தேயிலையோடு ஆரம்பிக்கப்பட்டது. 1910 இல் அச்செய்கை உச்சமடைந்தது. இன்றும் அதன் முதன்மை குன்றவில்லை. தென்னஞ்செய்கையிலும் கூடிய கவனம் செலுத்தப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சியில் முதல் 50 வருடங்கள் நீர்ப்பாசன விருத்தியில் கவனம் செலுத்தப்படவில்லை. பின்னர் நெற்செய்கை அபிவிருத்தியில் கவனம் செலுத்தப்பட்டு.. நீர்ப்பாசன வசதிகள் விருத்தியாகின.

## 25. இலங்கையின் அரசியல், சமூக, கல்வி மறுமலர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சமூக. கல்வி, சமய மறுமலர்ச்சிக்காக உழைத்தவர்கள் என இலங்கைச் சுதேசிகள் பலரைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடலாம் இவர்கள் ஆங்கிலக்கல்வி கற்ற பெருமக்களாக இருந்தனர். மிசனரி கல்வி நிலவிய காலவேளையில் தம் சமயத்தையும் மொழியையும் அவர்கள் நேசித்தனர். ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர், இரத்தலானை தர்மராம தேரர் என்போர் பௌத்த மதத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டனர். அவர்களுடன் கேர்னல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் என்ற அமெரிக்கர் பௌத்தத்தின் மறுமலர்ச்சிக்கு பெரும் தூண்டுதலாகவிருந்தார். 1886 இல் ஒல்கொட் கொழும்பில் ஆனந்தாக் கல்லூரியையும் நாடெங்கும் பல பாடசாலைகளையும் ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் அநகாரிக்க தர்மபாலா என்பவர் பௌத்த மறுமலர்ச்சிக்கும் கல்விக்கும் பெரும் பங்காற்றினார். அதேபோல வடவிலங்கையில் கல்வியின் மறுமலர்ச்சிக்கும் சமயமறுமலர்ச்சிக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஒரு இயக்கமாக நடாத்தினார். நாட்டில் வாழ்ந்த முஸ்லீம்களிடையே எம். சி. சித்திலெப்பை என்பார் முஸ்லீம்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்தார். அதனால் தேசிய இயக்கங்களும் சமய இயக்கங்களும் உருவாகின.

### 26. சமஷ்டி எண்ணக்கரு எவ்வாறு தோன்றியது?

1925 இல் கண்டியில் ஒரு தேசிய மாநாடு கூடியது. அந்த மகாநாட்டில் சமஷ்டி ஆட்சி பற்றிய எண்ணக்கருவை எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா முதன் முறையாக முன் வைத்தார். இலங்கை கண்டிப்பிரதேசம், கரையோரப்பிரதேசம், வடக்குக்கிழக்குப்பிரதேசம் என மூன்றாக வகுத்து சமஷ்டி ஆட்சி உருவாக்கப்பட வேண்டுமெனக் கோரிக்கை வைத்தார். அவர் யாழ்ப்பாண வாலிப காங்கிரசின் உதவியை அவ்விடயத்தில் கோரினார். அவர்கள் சமஷ்டிக் கோரிக்கையை நிராகரித்து ஒற்றையாட்சி அமைப்பில் இனங்களின் உரிமைகள் பேணப்படவேண்டுமென அறிவித்தனர்.

### பயிற்சிகள்

### (அ) சரியான விடையை தெரிவு செய்க.

1. பண்டைநாளில் வர்த்தக முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள்
(அ) தேயிலை, றப்பர், தென்னை (ஆ) கறுவா, மிளகு, ஏலம்.
(இ) கொக்கோ, கோப்பி, சிங்கோனா (ஈ) றப்பர், தேயிலை, கொக்கோ

2. பிரித்தானியர் முதன் முதல் ஆட்சி செய்த பிரதேசங்கள்
(அ) மலைநாடு (ஆ) வட தாழ்நிலம்
(இ) கரையோரப்பிரதேசங்கள் (ஈ) தென் பகுதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பிரித்தானியரின் முதலாவது இலங்கை ஆளுநர் -
(அ) பிரெடறிக் நோர்த் (ஆ) மெயிற் லாண்ட்
(இ) கோபல்லாவ (ஈ) ரொபட் பிரவுன்ரிக்ம

4. இராஜகாரிய முறையை முதன் முதல் இல்லாதொழித்தவர் -
(அ) பிரெடறிக் நோர்த் (ஆ) மெயிற் லாண்ட்
(இ) கோபல்லாவ (ஈ) ராஜபக்ஷ

5. மலையகத்தைக் கைப்பற்ற வழிவகுத்தவர்
(அ) பிரெடரிக் நோர்த் (ஆ) ஜோன் டெயிலி
(இ) மெயிற் லாண்ட் (ஈ) எகலப்பொல

**(ஆ)**

1. ஆளுநர் தோமஸ் மெயிற்லாண்டின் ஆட்சிச் செயற்பாடுகள் ஐந்தினை விபரிக்க.
2. கண்டியை ஆரம்பத்தில் கைப்பற்ற நிகழ்ந்த இரு முயற்சிகள் எவை?
3 பிரித்தானியர் கண்டி இராசிசயத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் நான்கினைத் தெரிவிக்க.
4. பிரித்தானியர் மலையகத்தை கைப்பற்ற ஆர்வம் காட்டியமைக்கான காரணங்கள் ஐந்தினைத் தருக.
5. ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்த இளவரசன் யார்?

**(இ)**

1. கண்டி இராச்சியம் ஒற்றுமையின்மைக்குக்கான பிரதான காரணம்
(அ) பிலிமத்தலாவையின் செயற்பாடுகள்.
(ஆ) பிலிமத்தலாவையின் உதவியாளர்கள் எழுவருக்கு வழங்கிய மரண தண்டனைகள்
(இ) மன்னனுக்கு எதிராகச் செயற்பட்ட பிரதானிகள்
(ஈ) இவை அனைத்தும்

2. கண்டி மன்னனுக்கு எதிராகக் கலகம் செய்தவன் -
(அ) எஹலப்பொல (ஆ) முத்துசாமி
(இ) பரணதல தேரர் (ஈ) ஜோன் டொய்லி

3. கண்டியை ஆக்கிரமிக்க பிரித்தானியர் முயன்றமைக்காக உடனடிக் காரணம் -
(அ) மலைநாட்டுக்கிளர்ச்சி
(ஆ) கரையோர வர்த்தகர்களை ஒற்றர்களாகக் கருதிசித்திரவதை செய்தமை
(இ) பிலிமத்தலாவையின் தூண்டுதல்
(ஈ) எஹலப்பொலவின் கிளர்ச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


4. பிரித்தானியருக்கு ஆதரவாக இருந்த பிரதானிகள் -
(அ) மொல்லிக்கொட (ஆ) பிலிமத்தலாவை
(இ) மீகேஸ்தென்ன (ஈ) அனைவரும்

5.1815 கண்டி ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பிரதானிகள்-
(அ) மொல்லிடிகாட, பிலிமத்தலாவை, கெப்பட்டிப்பொல
(ஆ) ரத்வத்த, துல்லேவ, கலகம
(இ) எஹலபொல, கலகொட, மில்லேவ (ஈ) அனைவரும்

(ஈ)

1. கண்டி உடன்படிக்கையின் பன்னிரு வாக்கியங்களில் முக்கியமான 5 சரத்துக்களைக் கூறுக.
2. 1818 ஆம் ஆண்டின் கண்டிச் சுதந்திரப்போரின் பின்னணி 6 தருக.
3. முதலாவது சுதந்திரப் போராட்டம் எனப்படும் கண்டிப்போராட்டம் எப்பிரதேசங்களில் பரவியது?
4. கண்டிப்போராட்டம் தோல்வியில் முடிந்தமைக்கான காரணங்கள் சில வற்றைக் கூறுக.
5. இரண்டாவது சுதந்திரப் போராட்டம் எப்போது நடந்தது?
6. இரண்டாவது சுதந்திரப் போராட்டத்துக்கான பின்னணிக் காரணிகள் யாவை?
7. புதிய வரிகள் எவை?
8. வீர புரன் அப்பு பற்றிக் கூறுக.
9. 1848 போராட்டம் தோல்வி கண்டமைக்கான காரணங்கள் யாவை?
10. கொங்காலே கொட பண்டா பற்றிக் குறிப்பிடுக

**(உ) தரப்பட்ட இலங்கைப் புறவுருவப்படத்தில் பிரித்தானியர் இலங்கையை ஆட்சி புரிந்த கரையோரத்தைக் குறித்துக் காட்டுக.**



**விடைகள்**

(அ) 1. (ஆ), 2. (இ), 3. (அ), 4. (அ), 5. (ஆ)

(ஆ) 1. (அ) உண்ணாட்டு உத்தியோகத்தர்களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கியமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) முதலியார்களின் அதிகாரங்களைக் குறைத்தமை.
(இ) இராஜகாரிய' முறையை மீண்டும் அறிமுகப்படுத்தல்.
(ஈ) நீதித்துறையில் சீர்திருத்தங்கள் கொண்டு வந்தமை.

2. (அ) 1803 இல் பிரெடெறிக் நோர்த் மேற்கொண்ட கண்டி ஆக்கிரமிப்பு.
(ஆ) 1815 இல் ரொபட் பிரவுன்ரிக் மேற்கொண்ட கண்டி ஆக்கிரமிப்பு.

3. (அ) 1763 இல் லோனி பைபஸ் கண்டி மன்னன் கீர்த்திராஜசிங்கனுடன் கொண்ட தொடர்பு.
(ஆ) 1782 இல் தூதுவர் ஹியூ ஹபொய்ட் இராஜசிங்கனைச் சந்தித்தமை
(இ) 1795 இல் ரொபட் அன்ட்ருஸ் .இராஜசிங்கனைச் சந்தித்தமை
(ஈ) 1800 .இல் பிரடறிக் நோர்த் ஸ்ரீவிக்கிரமராஜசிங்கனுடன் ஒப்பந்தம் செய்ய எத்தனித்தமை.

4 (அ) கண்டிக்கடவைகளில் வரிசெலுத்தல் இடைஞ்சலாக இருந்தமை.
(ஆ) கொழும்புக்கும் திருகோணமலைக்கும் இடையிலான போக்குவரத்துக்கு கண்டி தடையாக இருந்தமை.
(இ) பாதுகாப்பிற்காக கரையோரத்திலும் மலைநாட்டு எல்லைப் புறங்களிலும் இரண்டு படைகளைப் பராமரித்தல் செலவானது.
(ஈ) கண்டி மன்னன் பிரான்சியரின் படை உதவியை நாடலாம் என்ற பயம்.

5. முத்துசாமி.

(இ)

1. (ஈ), 2 (அ), 3. (ஆ), 4. (ஈ)., 5. (ஈ)

(ஈ)

1. (அ) இலங்கை பிரித்தானிய III ஆம் ஜோர்ஜ் மன்னரின் முடியாட்சியை ஏற்றல்.
(ஆ) உண்ணாட்டு அதிகாரிகளின் சலுகைகள், அதிகாரங்கள் பாதுகாக்கப்படலும் பழைய சம்பிரதாயங்கள் பின்பற்றப்படுதலும்.
(இ) பௌத்தமதம், புனித இடங்கள், பௌத்த குருமார்கள் என்போர்பாதுகாக்கப்படல்.
(ஈ) மரணதண்டனைகளை ஆளுநரின் அனுமதியின்றி வழங்க முடியாது.
(உ) பொதுமக்கள் குடியியல் வழக்குகள் சுதேச உத்தியோகத்தினரால் சம்பிரதாய முறைப்படி விசாரிக்கப்படுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. (அ)பிரித்தானிய அரசனுக்குப் பணிந்து நடக்க கண்டி மக்களால் முடியவில்லை.
(ஆ) கண்டிப்பிரதானிகளினின் வருமானம் குறைந்தமை
(இ)பிரித்தானிய உத்தியோகத்தர்கள் ஒப்பந்த விதிகளுக்கு இணங்க நடக்காமை.
(ஈ) பிக்குகளை மதித்து பௌத்த தர்மத்தை மதிக்காமை
(உ) பட்டம் பதவிகள் பரவலாக வழங்கப்பட்டமை
(ஊ)ஊவாப்பிரதேசத்தில் துரைச்சாமி அரச உரிமை கோரியமை.

3. ஊவா, தும்பறை, ஹெவாஹெட்டை, ஹாரிஸ் பத்துவ,

4. (அ) முறையான திட்டத்துடன் முன்னெடுக்காமை
(ஆ) போராட்டத்தலைவர்களிடையே தனிப்பட்ட கோப தாபங்கள் இருந்தமை
(இ) பிரதானி மொல்லிக்கொட பிரித்தானியர் பக்கம் சார்ந்தமை
(ஈ) புத்த தந்த தாது பிரித்தானியர் வசமாகியதுமை
(உ) உரிமைகோரிய துரைச்சாமி போலியான ஒருவன் என அறியவந்தமை
(ஊ) சரணடைபவர்களுக்கு உயிர்ப்பிச்சை அளிக்கப்பட்டமை.
(எ) சுதேசிகளினால் நவீன ஆயுதங்களை எதிர் கொள்ள முடியாமை

5. 1848 ஆம் ஆண்டு.

6. (அ) கோல்புறூக் சீர்திருத்தம் நிர்வாக சேவையாளரின் தொகையைக் குறைத்தமை.
(ஆ) தேசிய விவசாயம் கவனிப்பாரற்றுப் போனமை. பெருந்தோட்டங்களில் கவனம் செலுத்தியமை.
(இ) கிராமசபைகளிடம் இருந்த அதிகாரங்கள் அரச நீதிமன்றங்களுக்குச் சென்றன.
(ஈ) ஸ்ருவார்ட் மெகன்சி 1880 இல் சமர்பித்த தரிசுநிலச்சட்டம் விவசாயிகளைப் பாதித்தமை
(உ) மலைநாட்டில் மதுபானக் கடைகள் திறக்கப்பட்டமை
(ஊ) பௌத்தம் கவனிக்கப்படாமை
(எ) புதிய வரிகள் விதிக்கப்பட்டமை.

7. கடைகளுக்கான வரி, முத்திரை வரி, படகு வரி, நாய் வரி, துப்பாக்கி வரி. கரத்தை வரி, ஆள்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மொறட்டுவையில் பிறந்த வீர புரன் அப்பு 14 வயதில் கண்டிக்குச் சென்றார். பிரித்தானிய ஆதிக்கத்துக்கு எதிராக மக்களை ஒன்றுபடுத்தினார். கடஹப்பொல தேரரின் வழிகாட்டலில் செயற்பட்டார். 1848 இல் சுடப்பட்டிறந்தார்.

9. அ) போராட்டம் முழுமையாக ஒழுங்கு படுத்தப்படாமை.
(ஆ) மலையகம் முழுவதும் போக்குவரத்துப்பாதைகள் நன்கு அமைந்ததால் கலகத்தை அடக்க முடிந்தமை.
(இ) பிரித்தானியரால் தேவையான படைகளைத் தருவிக்க முடிந்தமை
(ஈ)சிங்களவரிடம் நவீன ஆயுதங்களுக்குப் பயிலப்பட்ட படை இல்லாமை
(உ)மலைநாட்டுப்பிரதானிகள் ஆதரவு அளிக்காமை

10. கொங்காலே கொட பண்டா களனியில் வனவாசஸவில் பிறந்தார். வரி எதிர்ப்பு இயக்கத்தில் இணைந்து கொண்டார். பின்னர் ஸ்ரீவிக்கிரமராஜசித்தி ராஜசிங்கன் எனும் பெயரோடு தம்பளையில் முடிசூட்டிக் கொண்டார். கைதாகி மலாக்காவுக்கு நாடுகடத்தப்பட்டார்.

(உ) வினாவுக்கான விடை ⟶





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 2

# இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறையின் வளர்ச்சி

**1. இலங்கைக்கு பாராளுமன்ற ஆட்சி யாரிடமிருந்து எப்படிக் கிடைத்தது?**

பிரித்தானியரிடமிருந்து எமக்குக் கிடைத்த கொடை பாராளுமன்றமாகும். பாராளுமன்றப் பிரதிநிதிகள் சபை சர்வசன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட பிராதிநிதிகளால் ஆனது. பிரதிநிதிகள் சபையில் ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என இரு பிரிவுகளுள்ளன. மந்திரி சபைக்குத்தலைமைவகுப்பவர் பிரதம மந்திரியாவர்.

**2. இலங்கையில் பாராளுமன்ற ஆட்சி முறை வளர்ச்சியுற்ற முக்கிய சந்தர்ப்பங்கள் எவை?**

1. கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் - 1833 ஆம் ஆண்டு
2. குறூமக்கலம் சீர்திருத்தம் - 1910 ஆம் ஆண்டு
3. மனிங் சீர்திருத்தம் - 1920 ஆம் ஆண்டு
4. மனிங் டென்சயர் சீர்திருத்தம் - 1924 ஆம் ஆண்டு
5. டொனமூர் சீர்திருத்தம் - 1931 ஆம் ஆண்டு
6. சோல்பரி சீர்திருத்தம் - 1945 ஆம் ஆண்டு

**3. கோல்புறூக் கமரன் சீர்திருத்தம் பற்றி எழுதுக.**

1833 இல் கோல்புறூக் சீர்திருத்தம் இலங்கைக்கு அறிமுகமாகியது. ஆங்கிலேயராட்சியில் இலங்கையரும் பங்கு கொள்வதற்கான அரசியற்றிட்டம் இதுவாகும். பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் கீழ் இலங்கையையும் ஒரு குடியேற்ற நாடாகக் கொண்டு வரும் திட்டமாக அது அமைந்தது. இலங்கையின் பல மக்கள் வாழ்வதைக் கவனத்துக்கு எடுக்காமலும், அவர்களது அபிப்பிராயங்களைக் கேட்காமலும் ஒற்றை ஆட்சிமுறையை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியது. எனினும் சட்ட சபையில் இனவாரிப்பிரதிநிதித்துவ முறையை ஏற்படுத்தியது. தமிழர்களுக்கும் கரையோரச் சிங்களவருக்கும் சட்டசபையில் பிரதிநிதித்துவம் வழங்கியபோது கண்டிச்சிங்கள வருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லீம்களுக்கும் ஒவ்வொரு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது. அதனால் முதன் முதலாகச் சுதேசிகள் அரசியலில் ஈடுபட வழி திறக்கப்பட்டது.

கோல்புறுக் கமரன் சீர்திருத்தத்தின் முக்கியமானது சட்டவாக்கக் கழகமும் நிர்வாகக் கழகமுமாகும். சட்டவாக்கக்கழகத்தில் ஆளுநர் ஒருவர் இருந்தார். உத்தியோகப் பற்றுள்ளோர் 9 பேரும் உத்தியோகப் பற்றற்றோர் 6 பேரும் இருந்தனர். உத்தியோகப் பற்றற்ற 6 பேரில், ஐரோப்பியர் 3,பறங்கியர் 1,சிங்களவர் 1, தமிழர் 1 என 6 பேரிருந்தனர். சட்டநிர்வாகக் கழகம் உத்தியோகத்தர்களைக் கொண்டிருந்தது. பிலிப்ஸ் பண்டிதரத்ன விஜயக்கோன் சிங்களவர் சார்பிலும் ஆறுமுகம்பிள்ளை குமாரசாமி என்பவர் தமிழர்' சார்பிலும் தெரிவாகினர்.

## 4. 1910 குறு மக்கலம் சீர்திருத்தம் யாது?

இச்சீர்திருத்தத்தில் சட்டசபை அங்கத்தவர்களாக 31 பேர் இருந்தனர். அதில் உத்தியோகப்பற்றுள்ளோர் 11 பேரும் உத்தியோகப் பற்றற்றோர் 20 பேரும் அடங்கினர். இதில் கண்டிச்சிங்களவர், கரையோரச்சிங்களவர், முஸ்லீம்கள் என்போர் சேர்க்கப்பட்டனர்.

## 5. மனிங் அரசியல் சீர்திருத்தங்கள் யாவை?

1921 இல் மானிங் அரசியல் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. படித்த இலங்கையருக்கு வாக்களிக்கும் உரிமை இருந்ததால் அதில் தமிழர்களே அதிக நன்மையடைந்தனர். அதனைச் சிங்களத் தலைவர்கள் விரும்பவில்லை. அவர்கள் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்துமாறு கோரிக்கை வைத்தனர். அதனால் இலங்கை அரசியலில் தாம் சிறுபான்மையினர் என்ற உணர்வையும், தாம் தனித்துத் தம் உரிமைகளுக்காகப் போராடும் உணர்வும் தமிழருக்கு ஏற்பட்டது. பிரதேசவாரிப்பிரதிநிதித்துவம் அறிமுகப்படுத்தப்பட்டதால் பெரும்பான்மை ஜனநாயக ஆட்சி என்ற உணர்வு ஏற்பட்டது. அதனால் சேர் பொன் அருணாசலம் தலைமையில் இலங்கைத் தேசிய காங்கிரசிலிருந்து வெளியேறிய தமிழ்தலைமை, தமிழர் மகாஜன சபையை அமைத்துக்கொண்டது. 1922 அல் தோட்டத்தொழிலாளரின் தொழிற்சங்க உபதலைவராக இருந்த ஏ.ஈ.குணசிங்க, இனவாத அரசியல் பேசத்தொடங்கியதும் தொழிற்சங்கம் இரண்டாகப் பிளவுற்றது. நடேசையர் அத்தொழிற் சங்கத்திலிருந்து வெளியேறினார். 1924 இல் யாழ்ப்பாண வாலிப காங்கிரஸ் தோற்றம் பெற்றது. ஐக்கிய இலங்கையிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹென்றி ஸ்டில் ஒல்கொட்



சேர் பொன். இராமநாதன்



சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா



அநகாரிக தர்மபால



சித்திலெப்பை



ஆறுமுக நாவலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் வெளியேறவேண்டும் என வாலிப காங்கிரஸ் குரல் எழுப்பியது. அதேவேளை கரையோரச்சிங்களவரின் பொருளாதார ஆதிக்கத்தினால் கண்டிச்சிங்களவர் பாதிப்புறுகின்றனர் என்ற கோஷமும் எழத்தொடங்கியது. அதனால் கண்டிச்சிங்களவர் தமக்குத் தனியான ஓராட்சி தேவை என்று பேசத் தொடங்கினர். இதன்படி சட்டசபை அங்கத்தவர்களாக 37 பேர் நியமனமாயினர்.உத்தியோகப்பற்றுள்ளோர் 14 பேரும் உத்தியோகப் பற்றற்றோர் 23 பேரும் இருந்தனர். இதில் முதன்முதலாக மாகாணரீதியில் அங்கத்தவர் தெரிவாகினர்.மேல் மாகாணம் 2 . ஏனைய மாகாணங்கள் ஒவ்வொன்று தெரிவாகினர்.

**6.மனிங் டெவான்ஷயர் அரசியல் சீர்திருத்தத்தினை விளக்குக.**

1912 இல் மனிங் டெவான்ஷர் அரசியல் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப் பட்டது. இதில் சிங்களவர்களின் ஆசனம் 14 ஆகவும், தமிழரின் ஆசனம் 4 ஆகவும் அமைந்தது. சட்டசபை அங்கத்தவர்கள் 49 பேராயினர். இதில் உத்தியோகப் பற்றுள்ளோர் 12 பேராகவும், உத்தியோகப் பற்றற்றோர் 37 பேராகவும் அமைந்தனர். உத்தியோகப் பற்றற்றோரில் 29 பேர் தேர்தல் மூலம் தெரிவாகினர். மேல் மாகாணத்துக்கு தமிழர் ஒருவர் தெரிவாகினார்.

**7. 1931 டொனமூர் அரசியல் திட்டம் குறித்து விபரிக்க.**

1927 இல் டொனமூர் ஆணைக்குழுவினர் அரசியல் சீர்திருத்தங்களை சிபார்சு செய்தனர். டொனமூர் பிரபுவிடம் கரையோரச்சிங்களவர் உள்ளூர் சுயாட்சி வேண்டும் என்றனர். கண்டிச்சிங்களவர் சமஷ்டி ஆட்சி வேண்டுமென்றனர். தமிழர்கள் ஒற்றையாட்சிக்குள் இனச்சமூகப்பிரதிநிதித்துவம் வேண்டுமென்றனர். தமிழ் மக்களுக்குக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பம் தவறிப்போனது. தமிழ்த்தலைவர்களின் தீர்க்க தரிசனமற்ற சிந்தனை செயற்பட்டது. தொழிலாள வர்க்கத்தின் தலைவராக விளங்கிய ஏ. ஈ குணசிங்ஹ இலங்கை மக்களுக்குச் சர்வசன வாக்குரிமை தேவை என்றார். சர்வசன வாக்குரிமை இலங்கை மக்களுக்கு வழங்கப்பட்டது. அதன் மூலம் சட்டசபைக்கு 50 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சிறுபான்மை யினருக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பதற்காக நியமன அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டனர். விவசாயத்துறை அமைச்சராக விளங்கிய டி.எஸ். சேனனாயக்கா விவசாயத்துறைக்குப் பெருந்தொண்டாற்றினார். கல்வி அமைச்சராக விளங்கிய சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா இலவசக்கல்வியை அறிமுகப்படுத்தினார். 1934 இல் நடந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடைத்தேர்தலில் இன அரசியலை முன்னெடுத்த ஜி.ஜி. பொன்னம்பலம் வெற்றியடைந்து அரசியலில் பிரவேசிக்கின்றார். பேரினவாத அரசியல் செயற்படத் தொடங்குகின்றது. இந்திய வம்சாவளி மக்களுக்கெதிரான நெற்காணிச்சட்டம், மீன்பிடிச்சட்டம், போக்குவரத்து அனுமதிச்சட்டம் என்பன நிறைவேற்றப்பட்டன.இதனால் 1939 இல் இலங்கை இந்திய காங்கிரஸ் தோற்றம் பெற்றது. பின்னர் நேருவின் ஆலோசனையின் படி 1944 இல் இலங்கை இந்திய காங்கிரஸ் புனரமைக்கப்பட்டடு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப்பெயர் பெற்று அதன் தலைவராக தொண்டமான் வருகின்றார். அதே ஆண்டு 50 க்கு 50 கோரிக்கையை முன்வைத்து அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸை ஜி.ஜி.பொன்னம்பலம் உருவாக்கினார்.

## 8. 1944 சோல்பெரி அரசியல் திட்டம் குறித்து விபரிக்க

1944 ஆம் ஆண்டு சோல்பெரி ஆணைக்குழுவின் சிபார்சுக்கேற்ப, இலங்கையில் பாராளுமன்ற ஆட்சிமுறை தாபிக்கப்பட்டது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஐம்பதுக்கு ஐம்பது கொள்கையை முன் வைத்தது. கண்டிச்சிங்களவர் சமஷ்டி ஆட்சியை வலியுறுத்தனர். கரையோரச்சிங்களவர் சுயாட்சியை முன் வைத்தனர். வழமைபோல இவற்றையெல்லாம் செவிமடுத்த சோல்பெரி பிரபு கடைசியில் ஒற்றையாட்சி அரசியலமைப்பினைச் சிபாரசு செய்தார். சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியல் சட்டத்தில் 29 வது பிரிவு சேர்க்கப்பட்டது. தமிழ்த்தலைவர்கள் எதிர்த்தும் பாராளுமன்றத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டது. பிரிந்து செல்லும் உரிமையுடன் கூடிய சமஷ்டி ஆட்சியைக் கோருவதாக தமிழ் காங்கிரசின் அங்கத்தவர்களில் ஒருவரான எஸ்.ஜே.வி. செல்வநாயகம் கோரிக்கை வைத்தார். கண்டிப்பிரதேசம் சமஷ்டி ஆட்சிமுறையைக் கோரியபோது அதனை உள்வாங்காத தலைவர்கள் இப்போது விழ்ப்படைந்தனர். காலங்கடந்த விழிப்பு. 1948 இல் இலங்கை டொமினிக்கன் அந்தஸ்தைப் பெற்றது. இலங்கையின் முதற் பிரதமராக டி.எஸ். சேனனாயக்க பதவி ஏற்றார். அவர் அமைச்சர் அவையில் 13 பேர் இடம் பெற்றனர். அவர் காலத்தில் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. 1948, பெப்ரவரி 4 ஆம் திகதி இலங்கை சுதந்திரநாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டது.

பராளுமன்றம் பிரதிநிதிகள் சபை, மூதவை (செனெட் சபை) என இரண்டுசபைகளாக இயங்கியது. பிரதிதிதிகள் சபையில் 101 அங்கத்தவர்கள் இருந்தனர். மேல் சபையில் அதாவது மூதவையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30 அங்கத்தவர்கள் இருந்தனர். சோல்பரி யாப்பின் கீழ் பாராளுமன்றத் தேர்தல் நடந்தது. இதில் ஐக்கிதேசியக்கடசி சார்பில் 42 அங்கத்தவர்கள் தெரிவாகினர். மற்றும் இலங்கை சமசமாயக் கட்சி 10, தமிழ்க்காங்கிரஸ் 7 பேர் தெரிவாகினர்.

## பயிற்சிகள்

1. ஆளுநர் ரொபெர்ட் வில்மர் ஹோர்டன் காலத்தில் செயற்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் எவை?
2. தரப்பட்ட இலங்கைப்படத்தில் பிரித்தானியர் ஆரம்பத்தில் அமைத்த ஐந்து மாகாணங்களைக் குறித்துப் பெயரிடுக படம்
3. பின்வரும் மாகாணங்களின் நிர்வாக மையங்கள் எவை?
   - வடக்கு
   - தெற்கு
   - கிழக்கு
   - மேற்கு
   - மத்தி
4. கோல் புறூக் கமரன் சீர்திருத்தத்தின் சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர் எத்தனை பேர்? அதில் உத்தியோகப்பற்றுள்ளோர் எத்தனை பேர்? உத்தியோகப் பற்றற்றோர் எத்தனை பேர்?
5. 1908 இல் ஜேம்ஸ் பீரிஸ் முன் வைத்த கோரிக்கைகள் எவை?
6. குறூ மக்கலம் சீர்திருத்தத்தின் சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர் எத்தனை பேர்? அதில் உத்தியோகப்பற்றுள்ளோர் எத்தனை பேர்? உத்தியோகப் பற்றற்றோர் எத்தனை பேர்?
7. குறூ மக்கலம் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் எவை?
8. மனிங் அரசியல் சீர்திருத்தத்தின் சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர் எத்தனை பேர்? அதில் உத்தியோகப்பற்றுள்ளோர் எத்தனை பேர்? உத்தியோகப் பற்றற்றோர் எத்தனை பேர்?
9. மனிங் சீர்திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் எவை?
10. மனிங் - டெவன்ஷயர் அரசியல் திட்டத்தின் சிறப்பம்சங்கள் யாவை?
11. மனிங் டெவன் சயர் அரசியல் சீர்திருத்தத்தின் சட்டவாக்கக் கழகத்தின் அங்கத்தவர் எத்தனை பேர்? அதில் உத்தியோகப்பற்றுள்ளோர் எத்தனை பேர்? உத்தியோகப் பற்றற்றோர் எத்தனை பேர்?
12. டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சுகள் எவை?
13. 1931 ஆம் ஆண்டு அமைத்த அரசுக் கழகம் எவ்வாறு அமைந்தது?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. சர்வசன வாக்குரிமை வழங்குவதை எதிர்த்தவர்கள் யாவர்,? ஆதரித்தவர் யார்,?
15. சோல்பெரி ஆணைக்குழுவின் சிபார்சுகள் எவை?
16. சோல்பரியின் சிபார்சின்படி அமைந்த பிரதிநிதிகள் சபை எத்தனை அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது? செனட் சபை என்ற மேல் சபை எத்தனை பேரைக் கொண்டிருந்தது?


(ஆ)

A நிரலையும் B நிரலையும் சரியாக இணைக்கவும்..

| A நிரல் | B நிரல் |
|---|---|
| 1. கோல்புறூக் | (அ) காலி |
| 2. டொனமூர் | (ஆ) டொனமூர் |
| 3. தென் மாகாணம் | (இ) 1883 |
| 4. சர்வசனவாக்குரிமை | (ஈ) ஆளுநர் |
| 5. சோல்பரி | (உ) 1931 |

**விடைகள்**

1. (அ) கரையோரத்தையும் கண்டியையும் ஒன்றிணைத்து ஒரே ஆட்சிக் குட்படுத்தல்
   (ஆ) நிர்வாகத் தேவைக்காக நாட்டை ஐந்து மாகாணங்களாகப் பிரித்தல்
   (இ) சட்டவாக்க, நிர்வாக சபைகன் உருவாக்கப்பட்டமை
   (ஈ) ராஜகாரிய முறை நீக்கப்பட்டது.
   (உ) வர்த்தக ஏக போக உரிமை நீக்கப்பட்டது
   (ஊ) காணிகளை விற்கும் கொள்கை ஆரம்பிக்கப்பட்டது.
   (எ) ஆங்கிலக் கல்வி அரச கொள்கையானது.
   (ஏ) புதிய சட்டங்களும் நீதிமன்றங்களும் ஆரம்பிக்கப்பட்டன.
2. படம் அருகில்
3. யாழ்ப்பாணம், காலி, திருகோணமலை, கொழும்பு. கண்டி
4. 15, 09, 06




இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்படல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. (அ) சட்டவாக்கக் கழகத்தக்கு பிரதேச வாரியாக அங்கத்தவர்கள் நியமனமாக வேண்டும்.

(ஆ) வாக்கு மூலம் தெரிவு செய்யப்பட வேண்டும்

(இ)அவர்கள் சட்டவாக்க்க கழகத்தின் அதிகாரங்களை விரிவு படுத்த வேண்டும்.

(ஈ) நிர்வாகக் கழகத்துக்கு உத்தியோகப் பற்றற்றோரிலிருந்தும் அங்கத்தவர்கள் நியமிக்கப்படவேண்டும்.

6 21, 11, 10.

7. (அ) அங்கத்தவர்கள் தெரிவுக்கு வாக்குரிமை பயன்படுத்தப்பட்டது.

(ஆ) கல்விப்புலமையுடைய ஒருவருக்கு ஒரு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டது.

(இ) இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ந்து நடை முறையில் இருந்தது.

(ஈ) உத்தியோகச் சார்புள்ளோர் தொடர்ந்தும் அதிகமாக இருந்தனர்.

8. 37, 14, 25.

9. (அ) உத்தியோகப் பற்றுள்ளோரைவிட உத்தியோகப்பற்றற்றோர் தொகை அதிகரிக்கப்பட்மை

(ஆ) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகமாகியது

(இ) மாகாணரீதியான தெரிவு முறை இடம் பெற்றது.

(ஈ) சட்டவாக்கக் கழகத்தின் அதிகாரங்கள் வரிவாக்கப்பட்டது.

(உ) வாக்குரிமை சிறு அளவில் அதிகரிக்கப்பட்டமை

(ஊ) இன ரீதியான பிரதிநிதித்துவம் தொடர்ந்து அமுல்படுத்தப்பட்டமை

10. (அ) அங்கத்தவர்கள் வரையறுக்கப்பட்ட வாக்குகளால் தெரிவாகினர்.

(ஆ) வாக்குரிமையானது 1920 ஆம் ஆண்டு சீர்திருத்தப்படி இருந்தது.

(இ) சட்டவாக்க்க கழகத்தின் உப தலைவராக அங்கத்தவர்களுள் ஒருவரை வாக்குரிமை மூலம் தெரிவு செய்தனர்.

(ஈ) இனவாரிப்பிரதிநிதித்துவம் தொடர்ந்து இருக்கும்

(உ)மேல் மாகாணத்தில் தமிழருக்கென புதிய அங்கத்துவம் ஒன்று வழங்கப்பட்டது

(ஊ) நிர்வாகக் கழகத்துக்கு உத்தியோகச் சார்பற்ற அங்கத்தவர்கள் மூவரை நியமிக்க சந்தர்ப்பம் கிடைத்தது

11. 49, 12, 37.

12. (அ) அரச கழகத்தை உருவாக்குதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) சர்வசன வாக்குரிமையை வழங்குதல்
(இ) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அறிமுகமாதல்
(ஈ) நிர்வாகக்குழு ஆட்சியை ஏற்படுத்தல்
(உ) அரசுக்கழகத்தால் உத்தியோகத்தர்கள் மூவரை நியமித்தல
(ஊ) ஆளுநரின் அதிகாரங்களை மறுசீரமைத்தல்

13. (அ) அரசுக்கழகம் 61 அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.
(ஆ) அதில் தேர்தல் மூலம் 50 பேர் தெரிவாகினர்.
(இ) அதில் உத்தியோகத்தர் மூவரிருந்தனர் அவர்கள் .பிரதம காரியதரிசி, நிதிக் காரியதரிசி, சட்டக் காரியதரிசி ஆவர்.
(ஈ) ஆளுநரால் 8 பேர் நியமிக்கப்பட்டனர்.

14. எதிர்த்தவர்கள்:- இலங்கை தேசிய கழகம், மலைநாட்டு தேசியசபை, இலங்கைத் தமிழர் சங்கம், முஸ்லீம் அமைப்புகள் ஆதரவளித்தவர்:- ஏ.ஈ. குணசிங்க

15. (அ) பாராளுமன்றம் செனட் சபையையும் பிரதிநிதிகள் சபையையும் கொண்டிருக்கும்.
(ஆ) மகாதேசாதிபதி முடியின் பிரதிநிதியாக இருப்பார்.
(இ) பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை ஒன்றிருக்கும்.
(ஈ) பிரதிநிதிகள் சபையில் பெரும்பான்மை பெற்றவர் பிரதமர் ஆவார்
(உ) மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு ஒன்று அமையும்.
(ஊ) பிரதம நீதியரசரின் கீழ் நீதித் சேவை ஆணைக்குழு அமைக்கப்பட்டது.
(எ) வெளிநாட்டு விவகாரமும் பாதுகாப்பும் பிரித்தானிய அரசரின் கீழ் இருந்தன.
(ஏ) சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன

16. 101. 30.

(ஆ) 1 – (இ). 2 – (உ), 3 – (அ), 4 – (ஆ), 5 – (ஈ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 3

# இலங்கையில் சமய, அரசியல் மறுமலர்ச்சி

## 1. இலங்கையின் அரசியல், சமூக, கல்வி மறுமலர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சமூக. கல்வி, சமய மறுமலர்ச்சிக்காக உழைத்தவர்கள் என இலங்கைச் சுதேசிகள் பலரைக் குறிப்பிடலாம் இவர்கள் ஆங்கிலக்கல்வி கற்ற பெருமக்களாக இருந்தனர். மிசனரி கல்வி நிலவிய காலவேளையில் தம் சமயத்தையும் மொழியையும் அவர்கள் நேசித்தனர். ஹிக்கடுவை ஸ்ரீ சுமங்கல தேரர், இரத்மலானை தர்மராம தேரர் என்போர் பௌத்த மதத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபட்டனர். அவர்களுடன் கேர்னல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் என்ற அமெரிக்கர் பௌத்தத்தின் மறுமலர்ச்சிக்கு பெரும் தூண்டுதலாகவிருந்தார். 1886 இல் ஒல்கொட் கொழும்பில் ஆனந்தாக் கல்லூரியையும் நடடெங்கும் பல பாடசாலைகளையும் ஆரம்பித்து வைத்தார். அதன் பின்னர் அநகாரிக்க தர்மபாலா என்பவர் பௌத்த மறுமலர்ச்சிக்கும் கல்விக்கும் பெரும் பங்காற்றினார். அதேபோல வடவிலங்கையில் கல்வியின் மறுமலர்ச்சிக்கும் சமயமறுமலர்ச்சிக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் ஒரு இயக்கமாக நடாத்தினார். நாட்டில் வாழ்ந்த முஸ்லீம்களிடையே எம். சி. சித்திலெப்பை என்பார் முஸ்லீம்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுத்தார். அதனால் தேசிய இயக்கங்களும் சமய இயக்கங்களும் உருவாகின.

## 2. மிஷனரி இயக்கம் என்றால் என்ன? அதன் செயற்பாடுகள் யாவை?

தனது சமயத்தைப் பரப்புவதற்தாக கிறிஸ்தவர்களால் மேற்கொள்ளப்பட்ட வழி முறைகளே மிஷனரி முறையாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்,ஆங்கிலேயர் இந்த வழியிலீடுபட்டனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் 5 மஷினரி இயக்கங்கள் இருந்தன.

1. லண்டன் மிஷனரி இயக்கம்
2. பப்டிஸ் மிஷனரி இயக்கம்
3. வெஸ்லியன் மிஷனரி இயக்கம்
4. அமெரிக்கன் மிஷனரி இயக்கம்
5. சேர்ச் மிஷனரி இயக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**3. கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதற்கு மிஷனரிகள் கையாண்ட பல்வேறு நடவடிக்கைகள் எவை?**

1. அரச ஆதரவைப் பெற்றுக் கொண்டமை.
2. ஒன்றுற்கொன்று போட்டி மனப் பான்மையுடன் செயற்பட்டமை.
3. சமூக சேவை நடவடிக்கைகளில் ஈடுபட்டமை – வைத்தியசாலைகள் அமைத்தல். ஆதரவற்றோருக்கு உதவல்.
4. புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வெளியிட்டமை
5. கிறிஸ்தவ சமய நூல்களை சுதேச மொழியில் மாற்றி வெளியிடல் பாதிரிமார் சுதேச மொழிகளைக் கற்று அதன் மூலம் பிரச்சாரம் செய்தல்.
6. கிராமங்கள் தோறும் பாடசாலைகளை அமைத்தல்.

**4. பௌத்த சமய மறுமலர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவை?**

1. பிரிவேனாக்கல்வி நிலையங்கள் அமைத்தல்
2. வாத பிரதி வாதங்கள் மேற்கொள்ளப்பட்டமை
3. சமய நாடகங்கள் மேடை யேற்றப்பட்டமை
4. கவிதைகள், உரைநடைகள் ஆக்கப்பட்டமை
5. பத்திரிகைகள் வெளியிடப்பட்டமை
6. பௌத்த ஆங்கிலப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை

**5. பிரிவேனாக்களை அமைத்தர்கள் யாவர்?**

காலவே சித்தார்த்த தேரர், ஹிக்கடுவை ஸ்ரீசுமங்கல தேரர், ரத்மலான ஸ்ரீ தர்மலோக தேரர்

**6. பஞ்ச மகா விவாதங்கள் எனப்பட்டவை யாவை?**

பத்தேகம விவாதம், வராகொட விவாதம், உதம்மிட்ட விவாதம், கம்பளை விவாதம், பாணந்துறை விவாதம்.

**7. பௌத்த பத்திரிகைகள் எவை,?**

லங்கா லோகய, சுமதி, லக்மினி பஹய

**8. ஹென்றி ஸ்டீல் ஒல்கொட்பற்றி விபரிக்க.**

1880 இல் இலங்கை வந்த ஒல்கொட் வெலிவத்த விஜயானந்த பிரிவேனாவுக்குச் சென்று பௌத்த நெறியைத் தழுவிக்கொண்டார். பௌத்த சமயத்தக்குப் பல தொண்டுகள் ஆற்றினார். அவை-

1. பௌத்த மாணவர்களின் சமய அறிவு விருத்திக்கு உதவினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மிஷனரிப் பாடசாலைகளுக்குச் சவாலாக பௌத்த பாடசாலைகளை நிறுவினார்.

3. பௌத்தமதத்தின் மேன்மைக்காக அரசுடன் வாதித்தார்.

4. பௌத்த கொடி ஒன்றினைத் தயாரித்தார்.

## 9. அநகாரிக தர்மபால என்பவர் குறித்து விபரிக்க.

அநகாரிக தர்மபாலாவின் இயற்பெயர் தொன் டேவிற் ஹேவா விதான ஆகும். ஆங்கிலமொழி அறிவுள்ளவர். பௌத்த விவாதம் புரிபவர்.பௌத்த சமயம், தேசிய கலாசாரம், ஒழுக்கம் என்பனவற்றைக் கட்டி எழுப்பினார். மேற்கத்திய ஒழுக்கம் பௌத்தத்தில் இணைவதை விரும்பவில்லை. மதுபாவனையை வெறுத்தார். பௌத்த மத மறுமலர்ச்சி ஏற்படப்பாடுபட்டார். கிராமங்கள் தோறும் சென்று பௌத்த தர்மத்தைப் பிரசாரம் செய்தார். பஞ்ச சீலர். மூடநம்பிக்கைகளை களைய மக்களைத் தூண்டினார்

## 10. இந்து சமய மறுமலர்ச்சிக்குத் தொண்டாற்றியவர் குறித்து விபரிக்க.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். இந்து சமய மேம்பாட்டிற்காகப் பாடுபட்டார். இவர். இந்து சமயப் பாடசாலைகளை ஆரம்பித்தார். பாடநூல்களை அச்சிட அச்சுக்கூடம் ஒன்றை நிறுவினார்.பாடநூல்களை எழுதினார். கவிதை, உரைநடை, மொழிபெயர்ப்பு நூல்களைப் பதிப்பித்தார். ஆங்கிலப்பாடசாலை ஒன்றை ஆரம்பித்தார். சமயத்தலைவராக இருந்தார்

## 11. இஸ்லாமிய சமயமறுமலர்ச்சிக்கு வித்திட்டவர் குறித்து எழுதுக.

அறிஞர் சித்திலெப்பை. கண்டியில் முஸ்லீம் பெண்களுக்கு ஒரு பாடசாலை ஆரம்பித்தார். முஸ்லீம்கள் அரபு மொழியையும் ஆங்கிலத்தையும் கற்பதன் அவசியத்தை வலியுறுத்தினார். மத்ரஸா என்ற மதப்பாடசாலையை ஆரம்பித்தார். முஸ்லீம்நேசன், ஞானதீபம் முதலிய பத்திரிகைகளை வெளியிட்டார். மது ஒழிப்புக்குப் பாடுபட்டார்.

## 12. 1915 இல் ஏற்பட்ட சிங்கள முஸ்லீம் கலவரத்தை விபரிக்க.

1915 ஆம் ஆண்டு சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும் இடையில் முதலாவது கலவரம் நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்றது. 1915 மே மாதம் 29 ஆம் திகதியிலிருந்து 1915 யூன் மாதம் 5 ஆம் திகதி வரை இலங்கையின் சில பகுதிகளில் சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் இனக்கலவரம் ஒன்று நடந்து முடிந்தது. 1915 ஆம் ஆண்டு புத்தரின் ஜனன தினத்தில் கண்டியில் சமய ஊர்வலம் ஒன்று, பெரகரா ஒன்று நடந்தது. அப்போது கம்பாயா முஸ்லீம்கள் கற்களை எறிந்து கைகளைத்தட்டிக் கேலி செய்தனர். கலவரம் வெடித்தது. கம்பளையிலிருந்த பள்ளிவாசல் சிங்களக் காடையர்களால் சேதமாக்கப்பட்டது. கொழும்புக்கும் அக்கலவரம் பரவியது. சமய எதிர்ப்புணர்வு இக்கலவரத்திற்கு வெளிப்டையாகக் காரணமாக அமைந்தபோதும் யதார்த்தத்தில் இக்கால கட்டத்தின் பொருளாதார அரசியல் நெருக்கடியையே இது பிரதிபலித்தது. இலங்கை வர்த்தகத்தில் முஸ்லீம்களின் பங்கு அதிகமாகவிருந்தது. தர்மபாலா, அவர்களை நாட்டின் செல்வவளத்தை அந்நியர்கள் எடுத்துச் செல்வதாக எடுத்துரைத்தார். மண்ணின் மைந்தரான பௌத்தர் பின்தள்ளப்படுவதாக எடுத்துரைத்தார். 'கரையோர முஸ்லீம்களுடனும் கொச்சிக்காரர்களிடமும் அந்நியரிடமும் சிங்களவர் கொடுக்கல் வாங்கல் வைத்திருக்கக் கூடாது' என லக்மின எழுதியது. 'முஸ்லீம்கள் இங்கு வேரூன்றிய எம் பகைவர்கள்' எனத் தினமின எழுதியது. இவற்றின் பின்னணியில் பௌத்த இஸ்லாமியக் கலவரம் மூண்டது. 'மார்சல் லோ' அமுல்படுத்தப்பட்டது. நூற்றுக்கணக்கானோர் இறந்தனர். சிங்களத் தலைவர்கள் கைதுசெய்யப்பட்டனர். டி.டி.பிரிஸ் என்பவர் முஸ்லீம் கடைகளைத் தாக்கியமை நிரூபிக்கப்பட்டு சுடப்பட்டார். கேவ விதாரணவுக்கும் பெர்னாண்டோ விஜயசேகரவுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது.

25 பேர் வரை கைது செய்யப்பட்டார்கள். பல வீடுகளும் உடைக்கப்பட்டன. இந்தக் கலவரத்தை அடக்க முடியாத ஆங்கில அரசு 'மார்ஷல் லோ'வைப் பிரகடனப்படுத்தியது. பலர் சுடப்பட்டார்கள். சிங்களத் தலைவர்களில் முதன்மையான பலர் கைதுசெய்யப்பட்டார்கள். அவர்களில் எப் ஆர்.சேனனாயக்கா, டி.எஸ். சேனனாயக்கா, சீ. பட்டுவந்துடாவை, ஹேவவிதாரண, டீ.பி. ஜயதிலக, ஏ.ஈ. குணசிங்க, டபிள்யூ. ஏ. சில்வா ஆகியோர் அடங்குவர். இவ்வாறு கைதானவர்கள் விசாரணையின்றிச் சுட்டுக் கொல்லப்படவிருந்தார்கள். அவ்வேளையில் சேர் பொன்னம்பலம் அருணாசலம், ஜேம்ஸ் பீரிஸ் ஆகியோர் அங்கிருந்து பிரித்தானியாவுக்கச் சென்று குடியேற்றச் செயலாளரைச் சந்தித்து அவர்களுக்கு மன்னிப்புப் பெற்று நாடு திரும்பினர். அதற்கு பிரதியாக சிங்களத்தலைவர்கள் சேர் பொன்னம்பலம் அருணாசலத்தை தேரில் ஏற்றித் தாங்களே குதிரைகளாக நின்று கொழும்பு வீதிகளில் இழுத்தார்கள்.

ஆதனால் 1917 இல் இலங்கை அரசியல் சீர்திருத்தக் கழகம் என்ற அமைப்பு சேர் பொன் அருணாசலத்தின் தலைமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமாகியது. அதன் பின்னர் அரசியல் சீர்திருத்தத்துக்கு 1919 ஆம் ஆண்டு இலங்கை தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டது. சேர் பொன்னம்பலம் அருணாசலம், சேர் ஜேம்ஸ் பீரிஸ், எப். ஆர். சேனனாயக்கா, ஈ. டபிள்யு. பெரேரா ஆகியோர் இலங்கையில் அரசியல் சீர்திருத்தங்களை ஏற்படுத்த முயன்றனர். இலங்கைத் தேசிய காங்கிரசின் முதல் தலைவராக பொன்னம்பலம் அருணாசலம் தெரிவு செய்யப்பட்டார். இந்த அமைப்பு சட்டசபையில் கூடிய எண்ணிக்கையான பிரதிநிதித்துவத்தைக் கோரியது. 1921 இல் முஸ்லீம்கள் தம்மை ஒரு தனிஇனமாக நோக்குமாறு கோரிக்கை வைத்தனர். தம்மைத் தமிழர் என்ற இனத்துள் அடக்க வேண்டாமென்றும், இலங்கை முஸ்லீம்கள் இந்திய முஸ்லீம்கள் எனப்பாகுபடுத்தாது இலங்கை முஸ்லீம்கள் என்ற ஒரு வகுப்புக்குள் மதிக்குமாறு முஸ்லீம் தலைவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

**13. சேர் பொன்னம்பலம் அருணாசலம் குறித்து விபரிக்க**

இங்கிலாந்தில் உயர் கல்வி கற்றார். சிவில் சேவையாளர். 1915 இல் சமுகசேவை முன்னணியை ஆரம்பித்தார். சேரிப்புற மக்களின் முன்னேற்றத்துக்காகப் பாடுபட்டார். சிங்கள முஸ்லீம் கலவரத்தை அமைதிப்படுத்தினார்.1919 இல் இலங்கைத் தேசிய காங்கிரசை உருவாக்கி அதன் தலைவராக விளங்கினார். பல நூல்களை எழுதினார்.

**14. இலங்கை நாட்டை உருவாக்கிய அறிஞர்கள் யாவர்?**

டீ.பி.ஜயதிலகா, சேர் பொன்னம்பலம் இராமநாதன், ஈ. டபிள்யூ. பெரேரா, எப் ஆர்.சேனநாயக்க, ஏ.ஈ.குணசிங்க, சீ. டபிள்யூ கன்னங்கரா, எஸ்.ஏ. விக்கிரமசிங்க, டீ.பி.ஜாயா, டி.எஸ். சேனநாயக்க,

## பயிற்சிகள்

(அ)

பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| மிஷனரி இயக்கங்கள் | தொழிற்பட்ட பிரதேசங்கள் |
|---|---|
| 1. பப்டிஸ் மிஷனரி | ---------------------------------------- |
| 2 .வெஸ்லியன் மிஷனரி | ---------------------------------------- |
| 3. சேர்ச் மிஷனரி | ---------------------------------------- |
| 4. அமெரிக்கன் மிஷனரி | ---------------------------------------- |

**(ஆ)**

1. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் விகாரைகளும் மிஷனரிகளும் ஒற்றுமையாக இருந்தன என்பதற்கு ஒரு உதாரணம் தருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பௌத்ததையும் இந்து சமயத்தையும் மிஷனரிமார்கள் எவ்வாறு கண்டித்தனர்?
3. போர்த்துக்கேயர் பரப்பிய கத்தோலிக்க சமயம் எது? ஒல்லாந்தர் பரப்பிய கத்தோலிக்க சமயம் எது? மிஷனரிகள் பரப்பிய கத்தோலிக்க சமயம் எது?
4. பின்வருவோர் தாபித்த பிரிவெனாக்கள் எவை?
   1. வலாவே சித்தார்த்த தேரர்
   2. ஹிக்கடுவ ஸ்ரீசுமங்கல தேரர்
   3. ரத்மலான ஸ்ரீதர்மலோக தேரர்
5. ஆறுமுகநாவலருக்கு நிகராக பௌத்தத்தில் குறிப்பிடத்தக்கவர் யார்?

**(இ)**

சரியாக A நிரலையும் B நிரலையும் இணைக்க

| A நிரல் | B நிரல் |
|---|---|
| 1. அநகாரிக தர்மபால | (அ) இஸ்லாம் சமயம் |
| 2. ஆறுமுகநாவலர் | (ஆ) ஐக்கியதேசியக்கட்சி |
| 3. அறிஞர் சித்திலெப்பை | (இ) பௌத்த சமயம் |
| 4. டி.எஸ்.சேனநாயக்க | (ஈ) பொன்னம்பலம் இராமநாதன் |
| 5. தேசியக் காங்கிரஸ் | (ஊ) இந்து சமயம் |

**(ஈ)**

1. 19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் செயற்பட்ட அரசியல் இயக்கங்கள் எவை?

1915 சிங்கள முஸ்லீம் இனக்கலவரம் எங்கு ஏற்பட்டது?
1. இலங்கை தேசிய காங்கிரசின் அங்கத்தவர்கள் யார்?
2. லங்கா சமசமாயக் கட்சியின் தலைவர் யார்?
3. கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் யார்?
4. சேர் பொன்னம்பலம் அருணாசலம் குறித்து 4 வாக்கியம் தருக.
5. சேர் பொன்னம்பலம் அருணாசலம் எழுதிய 3 நூல்கள் எவை?
6. இலவசக் கல்வியின் தந்தை யார்?
7. இலங்கையின் முக்கிய தலைவர்கள் யார்,?
8. தேசபிதா யார்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடைகள்

(அ) பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| மிஷனரி இயக்கங்கள் | தொழிற்பட்ட பிரதேசங்கள் |
|---|---|
| 1. பப்டிஸ் மிஷனரி | கொழும்பை மையமாக்க கொண்டது. |
| 2. வெஸ்லியன் மிஷனரி | நாட்டின் வடக்கு.தெற்கு பகுதிகள் |
| 3. சேர்ச் மிஷனரி | கொழும்பு. காலி. கற்பிட்டி, மன்னார் |
| 4. அமெரிக்கன் மிஷனரி | யாழ்ப்பாணம் |

(ஆ)

1. மிஷனரிகளின் சமயப்பிரசாரங்களுக்கு விகாரைகள் இடம் அளித்தன.
2. சிலை வணக்கம் தவறு என்றனர். சமய அனுட்டானங்கள் தவறு என்றனர். குருமாரைக் கேலி செய்தனர்.
3. போர்த்துக்கேயர் பரப்பியது கத்தோலிக்க சமயம். ஒல்லாந்தர் பரப்பியது புரட்டஸ்தாந்து சமயம். மிஷனரிகள் பரப்பியது அங்கிலிக்கன் கிறிஸ்தவம்.
4. சித்தாந்த தேரர் பரமதம்ச பிரிவெனா. ஸ்ரீசுமங்கல தேரர் - மாளிகாவத்த வித்தியோதய பிரிவெனா.
5. அநகாரிக தர்மபாலா.

(இ) 1. (இ), 2. (ஈ), 3. (அ), 4. (ஆ). 5. (உ)

(ஈ)

1. சிலாபச்சங்கம், கரைநாட்டுபெருந்தோட்ட உற்பத்தியாளர் சங்கம், இலங்கைச் சீர்திருத்தச்சங்கம், யாழ்ப்பாணச்சங்கம்
2. கம்பளை
3. பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம், ஜேம்ஸ் பிரிஸ், ஈ.டபிள்யூ.பெபேரா, ஏ.ஈ.குணசிங்க., டி.பி.ஜயதிலக, டி.எஸ்.சேனநாயக்க, பண்டாரநாயக்க, ஜயவர்த்தனா.
4. என்.எம்.பெரேரா.
5. எஸ்.ஏ.விக்கிரமசிங்க.
6. (அ) சமுகசேவைகள் முன்னணியை ஆரம்பித்து சேரிப்புற மக்களின் விருத்திக்கு உழைத்தார்.
   (ஆ) எல்லா இனத்தவரும் ஒன்றுபட உழைத்தார்.
   (இ) எமது அரசியல் தேவைகள் எனும் பொருளில் உரையாற்றினார்.
   (ஈ) இலங்கை தேசிய காங்கிரசை அமைத்தார்.
7. இலங்கை இந்திய வரலாறு, கல்வியில் கீழைத்தேசத்தின் முன்மாதிரிகள், தத்துவ சமயக் கல்வி
8. சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரா
9. சேர் பொன்னம்பலம் அருணாசலம், டி.பி ஜயதிலக, சேர் பொன்னம்பலம் இராமநாதன், ஈ.டபிள்யு.பெரேரா, F.R.ஜயசிங்க, V.E.குணசிறக, C.W.W.கன்னங்கரா, S.A.விக்கிரமசிங்க, D.B.ஜாயா
10. டீ.எஸ். சேனநாயக்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 4

# இலங்கையில் சுதந்திரத்தின் பின்னர் அரசியல் வளர்ச்சி

**1. சுதந்திர இலங்கை குறித்து விபரிக்க.**

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை சுதந்திர அரசு ஆகியது. 1947 ஆம் ஆண்டுச் சுதந்திரச்சட்டத்திற்கு அமைய இலங்கை சுதந்திரம் பெற்றது. பாராளுமன்ற ஆட்சி முறை இலங்கைக்கு ஆரம்பமாகியது. அவ்வாட்சி முறை ஒற்றையாட்சி முறையாக விளங்கியது. இங்கிலாந்தின் மன்னனோ ராணியோ இலங்கையின் அரசராக அல்லது அரசியாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அரசரின் பிரதிநிதியாக தேசாதிபதி ஒருவர் இலங்கையிலிருந்தார். அவர் பெயரளவில் மட்டுமே ஆட்சி புரிபவராக இருந்தார். உண்மையில் அதிகாரம் இலங்கையின் பிரதம மந்திரியிடமே இருந்தது. பாராளுமன்றம் இரு சபைகளைக் கொண்டிருந்தது. ஒன்று பிரதிநிதிகள் சபை. மற்றையது மூதவை எனப்படும் செனெற்சபை. நிர்வாகத்தைப் பிரதம மந்திரியைத் தலைவராகக் கொண்ட அமைச்சரவை விளங்கியது.

1833 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட கோல்புறூக் சீர்திருத்தங்கள் மூலம் மலைநாடும் கரையோரப்பிரதேசங்களும் ஒன்றிணைக்கப்பட்டு இலங்கை முழுவதற்கும் ஒற்றையாட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்டது. கோல்புறூக் சீர்திருத்தங்களில் திருப்தியடையாத இலங்கையர் கிளர்ச்சி செய்ததால், 1910 இல் மக்கலம் ஆள்பதி காலத்தில் யாப்பு சீரமைக்கப்பட்டது. பின்னர் 1924 இல் மனிங் ஆள்பதியாக இருந்த வேளையில் யாப்புச் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டது. 1931 ஆம் ஆண்டு டொனமூர் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதில் சர்வசன வாக்குரிமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் என்பன அறிமுகப்படுத்தப்பட்டன. 1947 ஆம் ஆண்டு அதன் முக்கிய சிபார்சாக பாராளுமன்ற ஆட்சியில் பிரதிநிதிகள் சபையும், செனெற்சபையும் அறிமுகமானது. 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் நடைமுறையிலுள்ள யாப்புக் குறித்து விமர்சனங்கள் எழுந்தன. இலங்கையின் நிர்வாகத்தில் பிரித்தானிய ஆதிக்கம் இருந்து வந்தது. பிரித்தானிய அரசியால் நியமிக்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசாபதி இலங்கையின் சுதந்திர நிர்வாகத்துக்குத் தடையாக இருப்பதான கருத்து இருந்தது. 1948 இன் பின்னரும் சட்டமியற்றும் அதிகாரம் பிரிட்டிஸ் பாராளுமன்றத்திடமும் இருந்தது.

**2. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தன் பின்னணியை விபரிக்க.**

டொனமூர் யாப்பின் பின்னர் இலங்கைச் சுதந்திரம் பற்றி இலங்கை மக்கள் கவலைப்பட்டனர். ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கங்கள் வளர்ச்சி கண்டன. இந்தியத் தலைவர்களான காந்தி, நேரு என்போர் சுதந்திரத்துக்காகப் போராடினர். இலங்கையர் தலைவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க சோல்பரி ஆணைக்குழுவின் சிபார்சுப்படி யாப்பு திருத்தப்பட்டது.1948 இலங்கை சுதந்திரம் பெற்றது. இலங்கையின் முதலாவது பிரதமராக டி.ஸ். சேனநாயக்க பதவி ஏற்றார்.

**3. 1970 பொதுத்தேர்தல் எப்படி இருந்தது?**

1970 ஆம் ஆண்டுத் தேர்தலில் மீண்டும் ஸ்ரீ மாவோ பண்டரநாயக்கா பிரதமராகத் தெரிவானார். இந்த அரசில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, லங்கா சமசமாயக்கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி என்பன கூட்டாக இருந்தன. இக்கூட்டு முன்னணி 116 ஆசனங்களைக் கைப்பற்றிப் பெரும்பான்மையைப் பெற்றது. முஸ்லீம் மக்களைத் தம் பக்கம் கவரும்' நோக்குடன் கல்வி அமைச்சு பதியுதீன் முகமதுவுக்குத் தரப்படுகின்றது. பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மாணவர்கள் கூடுதலாகப் பிரவேசிப்பதைத் தடுக்கும் விதத்தில் தரப்படுத்தல் முறையை அறிமுகம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் யாழ்ப்பாணத்தில் பாடசாலைகளின் பகிஸ்கரிப்பும் மாணவர்களின் ஊர்வலங்களும் ஆரம்பித்தன. 1971 இல மக்கள் முன்னணியின் தலைமையில் 'சேகுவேர' கிளர்ச்சி ஒன்று இலங்கையில் ஏற்பட்டது. சிங்கள இளைஞர்களிடையே ஏற்பட்ட அமைதியின்மை இக்கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. பெரும் உயிர்ச் சேதத்துடன் இக்கிளர்ச்சி அடக்கப்பட்டது. நாட்டின் அபிவிருத்திக்காக 24 மாவட்ட அபிவிருத்தி சபைகள் அமைக்கப்பட்டன. அரசியல் அதிகாரி ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி சபைக்கும் நியமிக்கப்பட்டார். 1972 ஆம் ஆண்டு நிலஉச்ச வரம்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஒருவர் தமக்குச் சொந்தமாக வைத்திருக்கக் கூடிய அதிக அளவு நிலம் 50 ஏக்கரென இச்சட்டம் நிர்ணயித்தது. பத்தாண்டுத் திட்டம் (1959), ஐந்தாண்டுத்திட்டம் (1973) என்பன நடைமுறைப் படுத்தப்பட்டன. துரித மகாவலித்திட்டம், சுதந்திர வர்த்தக வலயம், வீடமைப்புத் திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்பட்டன. கைத்தொழில்கள் தேசிய மயமாக்கப்பட்டன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**4. 1952 புதிய அரசியல் யாப்பு யாது?**

இந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியச் கட்சி வெற்றிபெற்றது. டட்லி சேனநாயக்க இரண்டாவது பிரதமரானார். 54 ஆசனங்களை ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றிக் கொண்டது.

**5. டட்லி சேனநாயக்க பதவி விலக ஏன் நேர்ந்தது?**

1. 1953 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி. அரிசி விலை ஏற்றம்.
2. நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் நடாத்திய ஹர்த்தால்
3. பாராளுமன்றத்தினுள் எதிர் நடவடிக்கைகள் தலைதூக்கியமை.

**6. அடுத்துப் பிரதமரான சேர் ஜோன் கொத்தலாவையின் ஆட்சி எவ்வாறிருந்தது?**

அடுத்து சேர் ஜோன் கொத்தலாவலை பிரதமரானார். 1953 தொடக்கம் 1956 வரை பிரதமராகவிருந்தார். 1954 இல் கொழும்புத்திட்ட மாநாடு கூட்டப்பட்டது. 1955 இல் ஐ.நா.சபையில் இலங்கை அங்கத்துவம் பெற்றது. 1955 பாண்டுங் நகரில் ஆசிய ஆபிரிக்க மாநாட்டில் கலந்து கொண்டது.நேரு கொத்தலாவலை ஒப்பந்தம் கைச்சாத்தானது. மக்கள் மத்தியில் செல்வாக்கை அரசு இழந்தது. பண்டாரநாயக்காவின் தேசிய உணர்வு கோட்பாடு வளரத்தொடங்கியது.

**7. 1956 ஆம் ஆண்டு தேர்தல் எவ்வாறிருந்தது?**

1956 ஆம் ஆண்டுத் தேர்தல் இலங்கை வரலாற்றில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்க பிரதம மந்திரியானார். கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இந்தியத் தமிழருக்கும் எதிராகவிருந்த பெரும்பான்மைச் சிங்களத் தலைவர்களின் கவனம் இலங்கைத் தமிழர் மேல் திரும்பத் தொடங்கியது. 'சிங்கள மக்களின் பாரம்பரியப் பகைவர்கள்' எனத் தமிழர் சிங்கள பௌத்தர்களால் கருதப்படத் தொடங்கினர். 1950 களில் மொழியை அடிப்படையாக் கொண்ட அரசியல் ஆரம்பமாகியது. ஆங்கில மூலம் கல்வி கற்பதால் சுயமொழியில் கற்கின்ற பிள்ளைகள் வாய்ப்புகளை இழக்கின்றனர் என்ற சிந்தனை உருவாகியது. ஆதலால் சிங்களம், தமிழ் மூலமான கற்றல் ஆரம்பிக்கப்பட வேண்டும். அரச மொழியாகச் சிங்களம் இடம் பெறவேண்டும் எனக் கருதினர். 1944 இலேயே சிங்கள் அரச மொழியாக்கப்பட வேண்டும் என்ற பிரேரணையை ஜே.ஆர். ஜயவர்த்னா தான் முன் வைத்திருந்தார். அத்தோடு தமிழும் சேர்த்துக் கொள்ளப்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பிரதமர்கள்


டி.எஸ்.சேனநாயக்க


ஜோன் கொத்தலாவல


பண்டாரநாயக்கா


தஹநாயக்கா


டட்லி சேனநாயக்க


சிறிமாவோ பண்டாரநாயக்க


* ஜே.ஆர்.ஜயவர்த்தனா


* ஆர். பிரேமதாஸ


* சந்திரிக்கா குமாரதுங்க


டி.பி. விஜயதுங்க


* மகிந்தராஜபக்ஷ


விக்கிரமநாயக்க

* பின்னர் ஜனாதிபதிகளானவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற திருத்தத்தோடு அப்பிரேரனை நிறைவேறியிருந்தது. 1951 இல் 'சிங்களத்தையும் தமிழையும் உடனடியாக அரச கரும மொழியாக்க வேண்டும்' எனப் பண்டாரநாயக்க வற்புறுத்தினார். 1953 – 1956 களில் மொழிபற்றி சர்ச்சைகள் அரசியலில் முதன்மை பெற்றன. பிரதமராகவிருந்த கொத்தலாவல. கொக்குவிலில் தமிழுக்கும் சம உரிமை வழங்கப்படும் என்று யு.என்.பியின் நிலைபாட்டை வெளியிட, ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கத்திலிருந்து பண்டாரநாயக்கா தன் கருத்தினை மாற்றி 24 மணிநேரத்துக்குள் சிங்களம் மட்டும் சட்டத்தைத் தான் நிறைவேற்றுவதாக அறிவித்தார். அதனால் யு.என்.பியும் தன் மொழிக் கொள்கையைச் சிங்களம் மட்டும் என மாற்றிக் கொண்டது. 1956 இல் சிங்களம் மடடும் மசோதாவை, அரசைக் கைப்பற்றிக் கொண்ட பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார். அம்மசோதா ஆதரவாக 66 வாக்குகளையும் எதிராக 29 வாக்குகளையும் பெற்று நிறைவேறியது.

அதனால் 50 ஆண்டுகளின் பின்னர் முதலாவது கொடுமையான வன்செயலுக்கு 1956 ஆம் ஆண்டின் மொழிபிரச்சினை தொடர்பான வற்புறுத்தல் வழி வகுத்தது. சமஷ்டிக் கட்சி இச்சட்டத்திற்கு எதிராகப் பாராளுமன்றத்துக்கு முன்பாக ஒரு சத்தியாக்கிரகம் செய்வதாக முடிவுசெய்தது. அதனால் முதல்நாள் இரவே பாராளுமன்றத்தைச் சுற்றி முள் வேலி அமைக்கப்பட்டது. ஆயுதம் தாங்கிய பொலிசார் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.ஆனாலும் தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தைப் பாராளுமன்றத்துக்கு முன்பாக தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்த்துக் காலி முகத்திடலில் சாத்வீகமாகச் சத்தியாக்கிரகம் செய்தனர். பொலிசார் பார்த்துக்கொண்டிருக்க தடிகளாலும் கற்களாலும் அவர்கள் தாக்கப்பட்டனர். பெயிரா ஏரியில் தூக்கி வீசப்பட்டனர். தமிழ்த்தலைவர்களும் தொண்டர்களும் சிங்களக் காடையர்களால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து தமிழர்கள் காணுமிடங்களில் தாக்கப்பட்டார்கள். இலங்கையில் தமிழர்களுக்கும் சிங்களமக்களுக்குமான இனக்கலவரம் ஏற்படலாயிற்று தமிழர் போதியளவு தாக்கப்பட்ட பின்னர், காலம் கடந்து அவசரக்காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. அகதிகளான தமிழர் கப்பலில் வடக்கே அனுப்பப்பட்டனர். கொழும்புத் தமிழருக்கு எதிராகவும், கிழக்கு மாகாணத்தில் கல்லோயாக் குடியேற்றதிட்டத்தில் வசித்த தமிழ் மக்களுக்கு எதிராகவும், வன்முறைகள் வெடித்தன. அவ்வன்முறையின்போது 150 க்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர். சத்தியாக்கிரகப் போராட்டம் ஆயுதமுனையில் அடக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஜனாதிபதிகள்



ஜே. ஆர். ஜெயவர்த்தன



பிரேமதாஸா



டி. பி. விஜயதுங்க



சந்திரிகா பண்டாரநாயக்க



மகிந்த ராஜபக்ஷ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. பண்டா – செல்வா ஒப்பந்தம் குறித்து விபரிக்க.

இந்த நாட்டின் அரசியலில் இதன் பின்னர் இனப்பிரச்சினை தீவிரமடைந்தது. 1957 இல் சமஷ்டிக்கட்சி பெரியதொரு சத்தியாக்கிரகத்தைச் செய்யவிருப்பதாக அறிவித்தபோது, பிரதமர் பண்டாரநாயக்கா தமிழ்த் தலைவர்களுடன் ஒரு வகையில் ஒத்துப் போக விரும்பினார். அதனால் பண்டா – செல்வா ஒப்பந்தம் ஒன்று இருசாராரும் பேசி முடிவெடுத்த பின்னர் ஜூன் 26 ஆம் திகதி கைச்சாத்தானது. முதலில் வடக்குக்கிழக்கில் நடைபெற்று வரும் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், சிறுபான்மை மக்களின் தேசிய மொழியாகத் தமிழை அங்கீகரித்தல், வடக்கு கிழக்கின் நிர்வாக மொழியாகத் தமிழ் விளங்கல், பிரதேச சபைகளை உருவாக்கி அவற்றின் மூலம் பிரதேச சுயாட்சி வழங்கல் முதலான உரிமைகளை இந்த ஒப்பந்தம் வழங்குவதாகக் கூறியது. தீவிரப்போக்குடைய பிக்குகள் உட்பட சிங்களவர்களில் ஒரு பகுதியினர் இந்த ஒப்பந்தம் சிங்களவர்களின் நலன்களைப் பாதிக்கும் துரோகச்செயல் எனப்பிரகடனப்படுத்தினர். இம்மசோதாவுக்கு எதிராகக் கண்டியை நோக்கி ஒரு யாத்திரையை ஜே. ஆர்.ஜயவர்த்தனாவால் மேற்கொள்ளப்பட்டது. இவை யாவற்றிக்கும் மேலாக பிக்கு எக்சத் பெரமுனயின் சார்பாக பௌத்த பிக்குகள் பிரதமரின் வீட்டின் முன் கூடி ஒப்பந்தத்தைக் கிழத்தெறியும்படி ஆர்ப்பாட்டம் செய்தனர். எட்டு மாதங்களின் பின்னர் இந்த ஒப்பந்தம் பண்டாவால் கிழித்தெறியப்பட்டது

## 9. எஸ்.டபிள்யூ.பண்டாரநாயக்காவின் அரசியல் செயற்பாடுகள் எவை?

1. தேசியமயமாதல் செயற்பாடு விரிவானது.
2. இந்திய இலங்கை உறவுவலுவடைந்தது.
3. இலங்கை ஒரு குடியரசாகும் எண்ணம் ஏற்பட்டது.
4. தேசிய விவசாய கைத்தொழில் சபை நிறுவப்பட்டது.
5. சிங்களம் அரச கரும மொழியாக்கப்பட்டது.

## 10. 1972 புதிய அரசியல் யாப்பு யாது?

1972 ஆம் ஆண்டு புதிய அரசியல் யாப்பு ஒன்றினை சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசு பராளுமன்றத்தில் குடியரசு யாப்பை நிறைவேற்றியது. பிரித்தானிய அரசியின் பிரதிநிதியாக இருந்த தேசாதிபதி அந்த யாப்பின் படி இலங்கைப்பிரதமரின் பரிந்துரைக்கு இணங்க நடக்கும் ஜனாதிபதி ஆகினார். அரசியால் முதலில் நியமனமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசாதிபதி ஒலிவர் குணத்திலகாவுக்குப் பதிலாக முதலாவது ஜனாதிபதியாக வில்லியம் சோபல்லாவை நியமனமானார்.

## 11. 1972 கூட்டணியின் தோற்றத்தை விபரிக்க.

தமிழ் அரசியற்கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாணவச் சங்கங்கள் என்பன 1972 இல் ஒன்று சேர்ந்து வட்டுக்கோட்டையில் ஒரு மகாநாடு கூட்டி, அதில் தம்மிடையே ஒரு கூட்டணியை உருவாக்கின. சாத்வீகமான கோரிக்கைகள் பயனற்றுப்போனதும் தமிழ்த்தலைவர்கள் வட்டுக்கோட்டையில் கூடி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர். 'சுதந்திரத்துக்கான புனிதப்போரில் தம்மை முற்று முழுதாக அர்ப்பணிக்க முன் வருமாறும் இறைமையுள்ள சோசலிசத் தமிழீழ அரசு என்ற இலக்கை அடையும் வரை தயங்காது உழைக்குமாறும் தமிழ்த்தேசிய இனத்திற்குப் பொதுவாகவும் தமிழ் இளைஞர்களுக்குச் சிறப்பாகவும் இம்மகாநாடு அறை கூவல் விடுகின்றது' என்பது தீர்மானமாகும். சமூக முரண்பாட்டின் புதிய பாதை திறக்கப்பட்டது. அதேவேளை 1972 இன் பிற்பகுதியில் தமிழ்மாணவர் பேரவை தலைமறைவு இயக்கமாக மாறியது. 1974 இல் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த தமிழாராய்ச்சி மகாநாடு குழப்பப்பட்டமை இளைஞர்களின் உணர்வுகளைத் தூண்டிவிட்டது. ஆயிரக்கணக்கில் தமிழ் மக்கள் வீரசிங்கம் மண்டபத்தின் முன் கூடியிருந்தபோது, முன்னாள் பொலிஸ் அதிபர் சந்திரசேகரா தலைமையில் மக்கள் மீது கலைப்பு நோக்கோடு வானத்தை நோக்கித் துப்பாக்கிச் சூடு வைக்கப்பட்டது. அதனால் மின்சாரக்கம்பி அறுந்து 9 பேர் மரணமானார்கள். சந்திரசேகராவின் ஜீப்பிற்குக் குண்டு வீசியமைக்காக சிவகுமாரன் தேடப்பட்டார். பின்னர் கைதாகும் நேரத்தில் சயனட் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். அதன் பின்னர் தமிழீழ விடுதலை இயக்கங்கள் தலை தூக்கின. 1976 இல் தமிழர் கூட்டணி தனது வட்டுக்கோட்டை மகாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணி எனத் தம் பெயரை மாற்றிக்கொண்டதோடு, இப்புதிய கூட்டணிக்கு முப்பெரும் தலைவர்களாக செல்வநாயகம், பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் அமைந்தனர்.

## 12. 1977 பொதுத்தேர்தல்

1977 ஆம் ஆண்டு நிகழ்ந்த பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் தேர்தலில் ஆசனங்களைக் கைப்பற்றிப் பெரு வெற்றி பெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி 8 ஆசனங்களுடன் படு தோல்வி கண்டது. அதனால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்க்கட்சியாக தமிழர் கூட்டணிக்கட்சி அமர்ந்து கொண்டது. எதிர்க்கட்சித் தலைவராக அமிர்தலிங்கம் தெரிவாகினார். ஸ்ரீ மாவோ அம்மையாரின் வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அதனை எதிர்த்து அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் வாதாடினார். அதே ஆண்டு பெரியதொரு இனக்கலவரம் இலங்கையில் ஏற்பட்டது. சென்பற்றிக்ஸ் கல்லூரிக் காணிவலில் பொலிசாருக்கும் தமிழ் மாணவர்களில் சிலருக்கும் இடையிலேற்பட்ட சண்டையானது இலங்கை முழுவதும் இனக்கலவரமாக விசுவரூபமெடுத்து, 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் மக்கள் தம் வீடுகளை இழந்தனர். நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர். தமிழ் ஈழ இயக்கங்கள் சட்டத்தால் தடைசெய்யப்பட்டன.

## 13. புதியதொரு அரசியல் யாப்பு

1978 ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் யாப்பு அறிமுகமாகியது. அதில் இலங்கை ஜனாதிபதியின் ஆட்சிக்குட்பட்டது. நிறை வேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி , விகிதாசாரப் பிரதிநிதித்துவம், அமைச்சரவை, பாராளுமன்றம் என்பன இந்த யாப்பில் அமைந்தன. முதலாவது ஜனாதிபதியாக ஜே.ஆர் ஜெயவர்த்தனா பதவி ஏற்றார். இதனை அடுத்து 1972 இல் பயங்கரவாதச்சட்டம் அமுலுக்கு வந்தது. அதன்படி அவசரகாலச்சட்டம், பத்திரிகைத் தணிக்கை என்பன அறிமுகமாயின. அத்துடன முக்கியமாக சிறைப்படுத்துவரைக் காலவரையறையின்றிச் சிறையில் வைத்து விசாரிக்கவும், பயங்கரவாத்தினால் கொல்லப்டும் சடலங்களை நீதி மன்ற விசாரணையின்றி அடக்கம் செய்யவும் இடமளிக்கப்பட்டது. ஜே.ஆர் ஜயவர்த்தனாவை அடுத்து ஆர். பிரேமதாஸ, டி.பி.விஜயதுங்க, சந்திரிகா பண்டாரநாயக்க விஜயதுங்க, மஹிந்த இராஜபக்ஷ ஆகியோர் ஜனாதிபதிகளாகப் பதவி வகித்தனர். இன்றைய ஜனாதிபதியாக மஹிந்த இராஜபக்ஷ விளங்குகிறார்.

## 14 சமூகவிகிதாசாரம்

1970 களில் உயர் கல்வியில் விகிதாசார முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அதற்கு முன் பல்கலைக்கழகத்திற்கு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட திறமைகாண் பரீட்சை மூலம் அனுமதிக்கப்பட்டனர். கூடிய புள்ளிகள் பெற்றவர்கள் சாதி, சமய, இன பிரதேச வேறுபாடின்றி தெரிவாயினர். இதில் ஒரு பாகுபாடில்லாவிட்டாலும் யாழ்ப்பாணம், கொழும்புத் தமிழர்கள் நல்ல புள்ளிகள் பெற்றனர். 1966 – 1970 ம் ஆண்டுகளில் விஞ்ஞான, பௌதிகப்பிரிவுகளுக்கு 35% தமிழரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியத்துறைக்கு 45வீதம் தமிழரும் தெரிவாகினர். நாட்டிலுள்ள வேறு இனங்களையும் மதங்களையும் ஒத்துப் பார்க்குமிடத்து தமிழ் மக்களிடையே கல்வியை மதிக்கும் கலாசாரம் பிரபல்யமாயிருந்தது. அதனால் கல்வியில் தரப்படுத்தல் அவசியமானதாக சிங்கள இனவாதிகள் கருதலாயினர். நடைமுறைப் படுத்தலாயினர். நிர்வாகத் துறையிலும் தமிழரின் விகிதாசாரம் அதிகமாகவிருந்தது. சிங்கள இனவாதிகளால் கல்வி, தொழில் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழ் மக்களிடையே தாம் ஓரங்கட்டப்பட்ட சமூகமாக உணர்வை ஏற்படுத்தியது. விரக்தியடைந்த தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை வைக்க இது காரணமாகியது.

1971 முதல் பல்கலைக்கழக அனுமதியில் ஒரு புதுத் தரப்படுத்தல் கொள்கை அறிமுகப்படுப்பட்டது. இன அடிப்படையிலான இந்த முறைமை கையாள்வதன் மூலம் முதன் முதலாகப் பல்கலைக்கழக அனுமதிக் கொள்கையின் நேர்மை பழுதுபட்டது. விஞ்ஞானம் அடிப்படையிலான கல்வியின் தமிழ்ப்பிரதிநிதித்துவம் 1970 ஆம் ஆண்டிலிருந்து 35% இலிருந்து 1975 ஆம் ஆண்டு வரையில் 19மூ ஆகக் குறைந்ததுடன் சிங்கள மாணவர்களின் பிரதிநிதித்துவம் சகலதுறைகளிலும் அதிகரித்துள்ளது. 1990 இல் அரசாங்கத்துறையில் வேலைக்கு அமர்த்தப்பட்டோரின் மதிப்பீட்டின்படி 5.9% மட்டுமே தமிழர்கள் ஆவர். இது கடந்த காலத்துடன் ஒப்பிடும்போது குறிப்பிடத்தக்க வீழ்ச்சியைக் காட்டுகின்றது.

இலங்கையின் இன அரசியல் மூலம் உருவாக்கப்பட்டு, கடந்த காலங்களாக நிலைமாறாது உள்ள இன்னுமொரு பிரச்சினை காணி உரிமை சம்பந்தமானதாகும். ஈரலிப்பான பிரதேசங்களில் சிங்களக்குடியேற்றங்களை அமைக்கும்போது அதனைப் புராதன சிங்கள பௌத்த கலாசாரத்தின் பிரதிபலிப்பாகக் கருதினர். இலங்கையின் வரண்ட பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை அமைத்தபோது அதன் நோக்கம் அரசியல் நோக்கமானதாகவும் இனவிகிதாசாரத்தினை அதிகரிக்கும் நோக்கமாவும் அமைந்தது. வரண்ட பிரதேசக் குடியேற்றம் சம்பந்தமாக தமிழ் மக்களிடையே மாறுபட்ட அபிப்பிராயம் தோன்றியதில் புதுமையில்லை. பாரம்பரிய நிலம் என்ற சிந்தனை தமிழ் மக்களிடையே வலுவடையத் தொடங்கியது. இலங்கையின் வட மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றத் திட்டங்களை அரசாங்க அனுசரனையுடன் அமைத்ததனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகப்படியான தமிழ் மக்கள் இந்தத்திட்டங்கள் அவ்வப்பிரதேசங்களில் தமது இனத்தைக் குறைக்கும் மற்றும். தமது இனத்தைப் புறக்கணிக்கும் திட்டங்களாக எண்ணினர். இந்தக் குடியேற்றத்திட்டங்கள் குடியேற்ற வீதத்தில் விசேஷமாகக் பெருமளவில் வித்தியாசத்தை ஏற்படுத்தியது. திருகோணமலையில் 1921 இல் கீழ் மாகாணத்தில் 3 வீதமாகவிருந்த சிங்கள மக்களின் எண்ணிக்கை 1981 இல் 30வீதமாக அதிகரித்தது. அதே வீதத்தில் அம்பாறை மாவட்டம் முன்னைய காலத்தில் தமிழ், முஸ்லீம் மக்களின் பெரும்பான்மைப் பிரதேசமாக விளங்கியபோதிலும் இன்று சிங்களவரின் பெரும்பான்மைப் பிரதேசமாக மாறிவிட்டது. கல்லோயா, யான் ஓயா, மதுரு ஓயா, அல்லை குடியேற்றத்திட்டங்கள் 3000 சதுரமைல் பிரதேசத்தைச் சிங்கள மயமாக்கியது. அதனால் புதிதாக அம்பாறை, சேருவெல என இரு சிங்களத் தேர்தல் தொகுதிகள் உருவாகின.

## 15. அதிகாரப்பரவல்

இருதரப்பினரிடையேயும் நிலவும் சமூக முரண்பாடுகளை நீக்க அதிகாரப்பரவல் அவசியம் என உணரப்பட்டது. பண்டா – செல்வா ஒப்பந்தம் (1957), டட்லி – செல்வா ஒப்பந்தம் (1965) என்பனவற்றில் இணக்கம் காணப்பட்ட போதிலும் வெவ்வேறு அழுத்தங்களின் காரணமாக ஒப்பந்தங்களில் அடங்கியவை ஒரு போதும் நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. இந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றத் தவறியமையால் அவ்வளவு காலமும் பேணிய சமஷ்டி அரசியல் முறைக்குப் பதிலாக தனிநாடு கோரிக்கைக்கு தமிழ் மக்கள் தள்ளப்பட்டனர். அத்துடன் இதன் விளைவாக தமிழ் மக்கள், விசேடமாக தமிழ் இளைஞர்கள் பொதுவாக நாடாளுமன்றத் தேர்தலில் இருந்த நம்பிக்கையை இழந்தனர். தமிழ்ச் சமுதாயம் ஜனநாயக ஆட்சிமுறையில் நம்பிக்கையிழந்து ஆயுதப்போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்டன. ஆயுதப்போரை அடக்க 1979 இல் அரசாங்கம் தீவிரவாத ஒழிப்புச்சட்டத்தை முன் கொண்டு வந்து 1982 தொடக்கம் நிரந்தரச் சட்டமாக அமுல் செய்தது.

1956, 1958, 1961, 1974, 1977, 1979, 1981, 1983 ஆகிய ஆண்டுகளில் நிகழ்ந்த இனக்கலவரங்கள் சமூக முரண்பாட்டினை உருவாக்கிய காரணிகளாகும். மரணங்கள், சொத்தழிப்பு, காடைத்தனம் என்பனவற்றால் ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகளாகினர். 1970 இல் ஆரம்பிக்கப்பட்ட மாணவர் பேரவையிலிருந்து 35



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராளிக்குழுக்கள் தமிழ் மக்களின் விடுதலை வேண்டி ஆயுதம் ஏந்தின.

## 16. மாவட்ட அபிவிருத்தி சபை

தமிழ் மக்களின் தொடரும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஐக்கியதேசியக்கட்சி மாவட்ட அபிவிருத்தி சபை ஆட்சியமைப்பை அறிமுகப்படுத்தியது. தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்டசபை அமைப்பை ஏற்றுக்கொண்டது. ஆனால் இளைஞர்கள் விரும்பாதிருந்தனர். தேர்தல் வாக்களிப்பொன்று ஏற்பட்ட பிரச்சினையால், யாழ்ப்பாணத்துக்குத் தேர்தல் நடவடிக்கைகளுக்காக அமைச்சர் காமினி திசநாயக்கா தலைமையில் வந்திருந்த ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர்கள், யாழ் நூல்நிலையம், தமிழர் கூட்டணித்தலைமையும், பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் வீடு, என்பனவற்றைத் தீ மூட்டி எரித்தனர். யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியே வெற்றிபெற்றது.

## 17. 1983 இனக்கலவரம்

சிங்களவர் - தமிழர் தொடர்புகளில் 1983 ஆம் வருடம் ஒரு மாபெரும் மைல்கல் ஆகும். 1958 ஆம் தொடக்கி வைக்கப்பட்ட ஒரு போக்கினை, 1983 ஆம் ஆண்டு ஒரு உச்சத்திற்கு எடுத்துச் சென்றது. 1958 ஆம் ஆண்டு தொட்டு இலங்கையில் வெடித்த இனக்கலவரமானது எல்லாம் மிகப்பெரும்பாலும் சிங்களவர் வாழும் பிரதேசங்களில் வாழும் தமிழருக்கெதிராகவே அமைந்தது. அவ்வேளைகளில் அகதிகளாகத் தப்பி ஓடி வாழ்வதற்கு வடக்கும் கிழக்குமே பாதுகாப்பானவை என நிருபணமாயிற்று. 1983 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகளின் தாக்குதலில் திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நாடு முழுவதும் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறைகள் நடந்தேறின. காடையர்களைக் கொண்டு மாவட்டந்தோறும் தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் ஜூலை 25 என்கிற ஒரே நாளில் வன்முறைகள் நடத்தப்பட்ட விதம் இது முன்னரே திட்டமிடப்பட்ட நடவடிக்கைளேயென அவதானித்தவர் மனதில் சந்தேகங்களைக் கிளப்பின. காடையர்களினதும் ஆயுதப்படையினரதும் வன்முறைகள் வெளியே நடந்து கொண்டிருந்த அதே நேரம் வெலிக்கடைச்சிறைச்சாலையில் இருந்த 53 தமிழ்க்கைதிகள் ஏனைய தமிழ்க்கைதிகளினால் கோரமாகக் கொலை செய்யப்பட்டனர். ஜூலை 29 இல் கொழும்பு நகருக்கு ஒரு புலி உறுப்பினர் வந்துள்ளார் என்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலியில் கொழும்புக் கடற்கரை வீதியில் 13 இளைஞர்கள் உட்படப் பல தமிழர் கொல்லப்பட்டனர். ஜூலைக்கலவரங்களைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் ஈழ விடுதலை இயக்கங்களில் சேர்ந்தனர். கணிசமானளவு முஸ்லீம் இளைஞர்களும் சேர்ந்தனர். இந்தியா இந்த இயக்கங்களுக்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வேறு வசதிகளையும் வழங்கியது. ஆயுதப் போராட்டம் கெரில்லாப் போராக மாற்றமடைந்தது.

## 18. ஒப்பிரேசன் லிபறேசனும் இந்திய அமைதிப்படையும்

1987 இல் வடமராட்சியைக் கைப்பற்றும் நோக்குடன் ஒப்பிரேசன் லிபறேசன் என்ற இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்தியா தலையிட்டது. இராமேஸ்வரத்திலிருந்து கப்பல்களில் இலங்கை அகதிகளுக்கு முதலில் உணவுப்பொருட்கள் எடுத்து வரப்பட்டன. பின்னர் விமானங்கள் உணவுப்பொதிகளை இலங்கை ஆள்புலத்துள் அத்து மீறிப்பிரவேசித்துப் போட்டன. இந்தியா நேரடியாகத் தலையிட முயன்றதால் வடமராட்சிப் போர் நிறுத்தப்பட்டது.

தமிழ் மக்களின் அதிகாரப் பகிர்வுக்கும் பாதுகாப்புக்கும் இந்திய அரசாங்கம் பொறுப்பாளியாகும் ஓர் ஒப்பந்தத்தை இந்தியா வரைந்தது. இலங்கை அரசாங்கம் சார்பில் ஜனாதிபதி ஜயவர்த்தனா இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டார். வலிமையான இயக்கமாக வளர்ந்திருந்த விடுதலைப் புலிகள் இந்த ஒப்பந்தத்தை விரும்பவில்லை. இந்தியப்பிரதமர் ராஜிவ் காந்தி, புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒருவிதமாகச் சம்மதிக்க வைத்தார். இந்த ஒப்பந்தத்தை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, ஜே.வி.பி., ஐக்கியதேசியக்கட்சியின் பிரேமதாசாக்' குழு ஆகியவை எதிர்த்தன. கலவரம்களை ஏற்படுத்தின. அதனால் கொழும்பு கொளுந்து விட்டெரியும் நிலையில், இலங்கை ஜனாதிபதி ஜயவர்த்தனாவும் இந்தியப்பிரதமர் ராஜிவ் காந்தியும் கொழும்பில் கைச்சாத்திட்டனர். இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாகும் போது. இந்திய அமைதிப்படை இலங்கைக்குள் பிரவேசித்து வடக்கு கிழக்கில் நிலைகொண்டது.

## 19. வடக்கு கிழக்கு மாகாணசபை

வடக்குக் கிழக்கில் மாகாணசபைக்கான இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கு எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டன. மாகாணசபைக்கான அங்கத்தவர்களைப் பிரேரிப்பதில் எற்பட்ட தடங்கல் காரணமாக விடுதலைப் புலிகள் இடைக்கால சபை முயற்சியிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்தங்கிவிட்டனர். இந்திய அமைதி காக்கும் படையினர் முன் பல கோரிக்கைகளை வைத்து திலீபன் சாகும்வரை உண்ணவிரதம் இருந்து மரித்தார். ஒப்பந்த நடைமுறைக்காலத்தில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர் 12 போராளிகள் கடலில் வைத்துக் கைதாகின்றனர். அவர்களைக் கொழும்புக்கு எடுத்தச் செல்ல முயன்றபோது அவர்கள் சயனைட் அருந்தி மரணத்தைத் தழுவிக்கொண்டனர். அதனால் இந்திய அமைதிப்படைக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் போர் மூண்டது. 1988 இல் வடக்கு கிழக்கு மாணத்துக்காக வேட்புமனு தாக்கலானது. ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப், ஈ.என்.டி.எல்.எ.ஃப், கூட்டணி, முஸ்லீம்காங்கிரஸ் என்பன வேட்பு மனு தாக்கல் செய்தன. வரதராஜப்பெருமாள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார்.

## 20. ஆட்சிமாற்றங்கள்

1989 ஜனாதிபதித் தேர்தலில் பிரேமதாசா வெற்றி பெற்று ஜனாதிபதியானார். ராஜிவ்வின் கொலைக்குப்பின்னர் இந்திய அரசில் ஜனதாதளத்திக் தலைவர் வி.பி.சிங் பிரதமரானார். இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்று இந்திய அரசு அமைதிகாக்கும் படையைத் திருப்பி அழைத்துக்கொண்டது.

## பயிற்சிகள்

1. சுதந்திரச் சட்டத்தின் பிரதான வாசகங்கள் எவை?
2. 1948 ஆம் ஆண்டு யாப்பு எத்தகையது?
3. 1972 வரையிலான தேசாதிபதிகள் யார்?
4. பின்வரும் கட்சிகளின் தலைவர்கள் யாவர்?
   - (அ) தமிழரசுக்கட்சி
   - (ஆ) ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி
   - (இ) ஐக்கிய தேசியக்கட்சி
5. டட்லி சேனநாயக்க, டி.எஸ். சேனநாயக்க, கொத்தலாவளை, பண்டாரநாயக்க, ஜயவர்த்தனா ஆகிய பிரதமர்களை ஒழுங்குபடுத்துக.
6. 1956 இல் அமைக்கப்பட்ட ஐக்கிய முன்னணி எனும் கூட்டணியில் இடம் பெற்ற கட்சிகள் எவை?
7. SWRD பண்டரநாயக்காவின் கொலையின் பின் சிறிது காலம் பிரதமராக இருந்தவர் யார்?
8. 1972 யாப்பின் பிரதான அம்சங்கள் எவை?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. 1978 ஆம் ஆண்டு யாப்பின் படி ஏற்பட்ட மாற்றங்கள் எவை?
10. ஜனாதிபதியின் பதவிக்காலம் எத்தனை ஆண்டுகள்?
11. இன்றைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் எத்தனை பேர்? மாவட்ட அடிப்படையில் விகிசார முறைப்படி தெரிவாவோர் எத்தனை பேர்? தேசிய பட்டியல் மூலம் தெரிவாவோர் எத்தனை பேர்?
12. அமைச்சரவையின் அதிகாரங்கள் எவை?
13. பின் வருவனவற்றிற்குச் சிறுகுறிப்பகள் தருக.
(அ) வி. கிதாசாரப்பிரதிநிதித்துவம்
(ஆ) ஜனாதிபதி ஆட்சி
14. அடிப்படை மனித உரிமைகள் யாவை?

## விடைகள்

1. 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி 4 ஆந் திகதி முதல் இலங்கை பிரித்தானியாவின் குடியேற்ற நாடு அல்ல. இலங்கை தொடர்பாக பிரித்தானிய பெற்றிருந்த ஆணையிடும் சட்டங்கள் பிறப்பிக்கும் அதிகாரம் இழக்கப்பட்டுள்ளன. இலங்கைப் பாராளுமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரங்கள் விரிவடைந்துள்ளன.
2. (அ) பிரித்தானிய அரசுக்குட்பட்ட நிர்வாகம் காணப்பட்டது.
(ஆ) அரசின் பிரதிநிதியாக ஆளுநர் இருப்பார்.
(இ) நிர்வாக நடவடிக்கைகளுக்கு நிர்வாக சபை இருக்கும்.இது பிரதிநிதிகள் சபைக்குப் பொறுப்புக் கூறவேண்டும்.
(ஈ) அமைச்சரவையின் தலைவராகப் பிரதமர் இருப்பார்.'
(உ) பிரதிநிதிகள் சபை, மேல் சபை என இரண்டு திகழும்.
(ஊ) அனைத்து நீதிமன்ற நடவடிக்கைகளும் நீதிச்சேவைகள் ஆணைக்குழுவின் மூலமாக மேற்கொள்ளப்படும்.
3. சொல்பரி பிரபு, ஒலிவர் குணதிலக, வில்லியம் கொபல்லாவ.
4. (அ) S.J.V.செல்வநாயகம் (ஆ) SWRD பண்டாரநாயக்க
(இ) D.S.சேனநாயக்க
5. D.S.சேனநாயக்க, டட்லி சேனநாயக்க, கொத்தலாவளை, பண்டாரநாயக்க, ஜயவர்த்தனா.
6. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி. புரட்சிகரச் சமசமாயக்கட்சி, பாஷா பெரமுன, இரியகொல்லவின் சுயேட்சை
7. டபிள்யு. தஹாநாயக்க
8. பெயரளவு ஜனாதிபதி, தேசிய அரசப் பேரவை, பிரதமர், அமைச்சரவை, நீதிமன்றத்தொகுதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. (அ) மக்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி.
(ஆ) விகிதாசாரப் பிரதிநிதித்துவம். இதற்கான தேர்தல் மாற்றம்.
(இ) பிரதிநிதிகள் கொண்ட பாராளுமன்றம்
(ஈ) ஜனாதிபதியால் நியமிக்கப்படும் நீதிபதிகளும் நீதிமன்றத் தொகுதிகளும்
(உ) அடிப்படை உரிமை பற்றிய பகுதி

10. 6 வருடங்கள்

11. பாராளுமன்ற அங்கத்தவர் தொகை 225. மாவட்ட அடிப்படையில் தெரிவாவோர் 196. தேசிய பட்டியல் 29.

12. (அ) ஜனாதிபதியே அமைச்சரவையின் தலைவர்.
(ஆ) ஜனாதிபதியால் பிரதமர் நியமிக்கப்படுவார்.
(இ) பாராளுமன்ற அங்கத்தவர்களிடமிருந்து தெரிவு செய்யப்படும் அமைச்சரவை தொடர்பாக திர்மானம் எடுக்கும் உரிமை ஜனாதிபதிக்குரியது.
(ஈ) சட்டங்களை நடைமுறைப்படுத்தல், வரவு செலவுத்திட்டம் தயாரித்தல் என்பன அமைச்சரவையின் பொறுப்பாகும்.

13. (அ) விகிதாசாரப்பிரதி நிதித்துவம் - நடைமுறையிலுள்ள தேர்தல் ஒழுங்காகும். ஆட்சிக்குரியவர்களை அவர்கள் ஜனாதிபதியாக இருந்தாலும் பாராளுமன்ற அங்கத்தவர்களாக இருந்தாலும் கட்சி அடிப்படையில் அல்லது சுயேச்சைக் குழு அடிப்படையில் ஒருங்கே தெரிவு செய்தலாகும். ஒரு குழு தெரிவாகும். ஒரு வாக்கினை கட்சிக்கும் மற்ற வாக்கினை விரும்பும் பேர் வழிக்கும் இடுவர்.
(ஆ) ஜனாதிபதி- இலங்கையின் நிறைவேற்று அதிகாரமுடையவர் ஜனாதிபதியார் அதிக உச்ச அதிகாரமுடையவர். பாராளுமன்றத்தைக் கூட்ட கலைக்க அதிகாரமுடையவர். அவரை நீதிமன்றத்தில் நிறுத்த முடியாது. அமைச்சரவையின் தலைவர் முப்படைகளின் தலைவர். 6 வருடகாலம் ஆளலாம். ஜனாதிபதியின் தேர்தலில் நாடு முழுவதும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கருதப்படும். அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 சத வீதத்திற்கு மேல் பெற வேண்டும். ஜனாதிபதி தனது பதவி ஆயுட் காலத்தை மக்கள் தீர்ப்பின் மூலம் நீடிக்கலாம்.

14. விரும்பிய தொழிலைச் செய்வதற்கான சுதந்திரம், சமய சுதந்திரம்,சட்டத்தின் முன் சமம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாயம் 5

# குடியேற்ற வாதப் பரம்பல்

**1. ஐரோப்பியர் அமெரிக்காக்கண்டங்களுக்கு வந்தபோது அங்கு வாழ்ந்த மக்கள் யார்?**

ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் பயனாக நாடு காண் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பயனாக மேல் நாட்டவர் வட, தென் அமெரிக்காக்களுக்கு வந்தனர். இவ்வேளை இக்கண்டங்களில் வாழ்ந்த மக்கள் -

(அ) செவ்விந்தியர்கள்
(ஆ) மாயா மக்கள்
(இ) இன்கா மக்கள்
(ஈ) அஸ்ரெக் மக்கள்

**2. மறுமலர்ச்சி யுகத்தின் விளைவுகளை விபரிக்க.**

(அ) மறுமலர்ரியின் பயனாக நாடுகாண் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. வியாபாரத்தின் தரைவழிப்பாதையில் மிக முக்கியமான கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியரால் கைப்பற்றப்பட்டதும் வர்த்தகத்திற்கான கடல் வழிகளைக் கண்டறிவது அவசியமானது.

(ஆ) மேற்கு ஐரோப்பிய விஞ்ஞானக்கண்டுபிடிப்புகள் நாடுகாண் பயணங்களுக்குத் தூண்டுதலாகவிருந்தன. திசையறிகருவி, வடமீன் கணிப்புக்கருவி, பாதுகாப்பான கப்பல்கள், கடற்பயணப் பயிற்சிகள், தொலைகாட்டி, பூமி கோளவடிவானது என்ற நிருபணம் அனைத்தும் கடற் பயணங்களுக்கு வாய்ப்பாக அமைந்தன.

(இ) கிறிஸ்தோபர் கொலம்பஸ் என்பார் ஸ்பானிய மன்னன் பேடின்ட், இராணி இசெபெல்லா ஆகியோரின் அனுசரணையுடன் 1492 இல் அத்திலாந்திக் சமுத்திரத்தின் ஊடாகத் தன் கடற்பயணத்தை ஆரம்பித்தார். மேற்குநோக்கிப் பயணப்பட்டு கீழைத்தேச நாடுகளைஅடைந்து வாசனைத்திரவியங்களையும், ஏனைய வியாபாரப் பொருட்களையும் பெற முடியுமென அவர் நம்பினார். அமெரிக்கக் கரையிலுள்ள பஹாமாத் தீவை அடைந்த கொலம்பஸ் தான் இந்தியாவின் கரையோரத்தை அடைந்து விட்டதாகக் கருதினார். பின்னர் நாடுகளைக் கண்டுபிடிக்கும் பயணங்களில் ஈடுபட்ட அமெரிக்கோ வெஸ்பிசு உள்ளிட்ட ஸ்பானிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடு காண் பயணிகள் இதுவொரு புதிய கண்டமெனக் கண்டறிவித்தனர். அதன் பின் போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரான்சிய, பிரித்தானிய நாட்டவர்கள் அமெரிக்காவில் குடியேறத் தொடங்கினர்.

## 3. புதிய நாடுகளைக் கண்டுபிடிக்கும் அவசியம் ஏன் ஏற்பட்டது?

(அ) மறுமலர்ச்சியின் பயனாக ஐரோப்பாவில் போர்த்துக்கல், ஒல்லாந்து, ஸ்பெயின், பிரான்ஸ், பிரித்தானியா போன்ற தேசிய அரசுகள் உருவாகின. இவை தமது நாடுகளின் பொருளாதார வலுவைக் கட்டி எழுப்புவதற்காக குடியேற்றநாடுகளைப் பெற விரும்பின.

(ஆ) முக்கியமாக மூன்று காரணிகள் குடியேற்ற நாடுகளைப் பெறுவதில் முக்கியம் பெற்றிருந்தன. அவை:

(1) அரசியற் காரணிகள்
(2) பொருளாதாரக் காரணிகள்
(3) சமயக்காரணிகள்

**(இ) அரசியற் காரணிகள்:** ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகளின் பொருளாதாரப்பலம், படைப்பலம், கடற்பலம் என்பன அதிகரித்தன. புதிய நாடுகளைக் கண்டுபிடித்துத் தம்நாட்டுக்கரியதாகக் குடியேற்றங்களை அமைக்கும் போட்டி இந்நாடுகளிடையே தோன்றியது. ஆதனால் ஸ்பெயின், பிரான்ஸ், பிரித்தானிய,போர்த்துக்கேய நாட்டு மன்னர்கள் நாடுகாண் பயணிகளுக்கு உதவிகள் புரிந்தனர்.

**(ஈ) பொருளாதாரக்காரணிகள்:** ஐரோப்பாவில் தோன்றிய தேசிய அரசுகள் வர்த்தகத்தில் மிகக் கவனம் செலுத்தின. அக்காலத்தில் 'வணிகவாதம்' இந்நாடுகளில் ஏற்பட்டிருந்தது. தமது நாட்டின் வருவாயை அதிகரிக்கவும், திறைசேரியில் பொன் நிரப்பவும் இந்நாடுகள் முயன்றன. கூடுதலான உலோகங்களைக் கொண்டு வரவும், இறக்குமதிச் செலவைவிட ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கவும், அதிக வருவாயைத் தரக்கூடிய கறுவா போன்ற வியாபாரப் பொருட்களை தம் நாட்டிற்குக் கொண்டு வந்து விற்று அதிக இலாபம் பெறவும், இந்நாடுகள் விரும்பின.

**(உ) சமயக்காரணிகள்:** ஐரோப்பாவில் கிறிஸ்தவ சமயத்தில் பல பிரிவுகள் ஏற்பட்டு சச்சரவுகள் ஏற்பட்டன. கலகங்களும் மரணங்களும் நிகழ்ந்தன. அதனால் ஐரோப்பிய மக்கள் பலரும் சமயச் சுதந்திரம் வேண்டி அமெரிக்காவுக்கு இடம் பெயர விரும்பினர்.

## 4. ஐரோப்பிய நாடுகள் அமெரிக்காவில் குடியேற்றங்களை நிறுவ ஏன் விரும்பின?

(அ) ஐரோப்பியநாடுகளும் அமெரிக்காவும் அத்திலாந்திக்கின் எதிர் எதிர்க் கரையில் அமைந்திருந்தன. எதிர்ப்பற்ற மேற்குப் புறப்பயணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) அமெரிக்காவின் கனிய வளங்கள், முக்கியமாகத் தங்கம்.

(இ) செழிப்பான மண்வளம், வாய்ப்பான காலநிலை, நீர்வளம் என்பன அமெரிக்காவில் குடியேறத் தூண்டின.

**2. ஸ்பானிய குடியேற்றங்கள் அமெரிக்காவில் எப்பகுதிகளில் அமைந்தன?**

கரிபியன் தீவுகள், பல்போவா, பனாமா, புளோரிடோ, கோட்டேஸ், பிசாரோ, பேரு முதலான நாடுகளில் அமைந்தன. இக்குடியேற்றங்களில் பொற்சுரங்கங்கள் காணப்பட்டமையால் ஸ்பெயின் மிகச் செல்வாக்கான நாடாக மாறியது.

**5. பிரான்சியக் குடியேற்றங்கள் அமெரிக்காவில் எப்பகுதிகளில் அமைந்தன?**

கனடாவின் கிழக்குக்கரையோரத்தில் அமைந்தன. 1535 இல் சென் லோரன்ஸ் நதி ஜெக்விஸ் என்பவரால் கண்டறியப்பட்டது. 1535 இல் பேரேரிகளுக்கு வடக்கே மிசிசிப்பி தோற்றம் பெறும் பள்ளத்தாக்கும் கண்டறியப்பட்டது. ஆதனால் சென் லோறன்சிலிருந்து மிசிசிப்பி வரை பிரான்சியக் குடியேற்றங்கள் அமைந்தன. அக்குடியேற்றத்தின் வட பகுதி நியூ பிரான்ஸ் எனவும், தென்பகுதி லூசியானா எனவும் அழைக்கப்பட்டன.

**6. அமெரிக்காவில் ஆங்கிலக்குடியேற்றங்கள் அமைந்தவாற்றை விபரிக்க.**

(அ) வடஅமெரிக்காவின் கிழக்குக்கரையோரத்தில் பிரித்தானியரின் குடியேற்றங்கள் அமைந்தன. 1497 இல் முதலாவது குடியிருப்பு கேப்பிரிட்டன் தீவிலும் பின்னர் 1537 இல் நியூபவுன்லாந்திலும் அமைந்தது.

(ஆ) பின்னர் 17 ம் நூற்றாண்டின் நடுப்பகுதியளவில் கிழக்குக்கரையோரத்தில் 13 ஆங்கிலக் குடியேற்றங்கள் உருவாகின. தேலாவெயர், ஜோர்ஜியா, மேரிலாந்து, மசெசுசெற், பென்சில்வேனியா, வேர்ஜினியா, நியூகம்சயர், கனேற்றிக்கட், வடகரோலினா, நியூஜேர்சி, நியூயோர்க் என்பன அவையாம்.

**7. அனைத்துக் குடியேற்றங்களும் ஆங்கிலேயருக்கு எவ்வாறு சொந்தமாயின?**

(அ) பிரான்சியர்கள், இங்கிலாந்துக்குச் சொந்தமான அமெரிக்கப் பிரதேசங்களைத் தமதாக்க அவாக் கொண்டனர். அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குப்பிரதேசங்களில் வசித்த செவ்விந்தியத் தலைவர்களுடன் பிரான்சியர் இரகசிய ஒப்பந்தம் செய்து கொண்டனர். பொன்ரியக் என்ற செவ்விந்தியன் பிரான்சியர்களுக்கு உதவ முன்வந்தான்.

(ஆ) 1744 இலிருந்து பிரான்சியர்களுக்கும் ஆங்கிலேயருக்கும் மோதல்கள் ஆரம்பமாயின. மோன்றிகாச் என்பவன் தலைமையில் பிரான்சியப்படையும், ஜேம்ஸ்வூல்ப் என்பவன் தலைமையில் ஆங்கிலப்படையும் சண்டையிட்டன.

(இ) 1756 – 1763 வரை 7 ஆண்டுகள் யுத்தம் நடந்தது. இந்த யுத்தத்தில் பிரான்சுக்குச் சொந்தமான கனடா, லூசியானா, நோவாகோசியா, கேப்பிரிட்டன் தீவு ஆகியனவும், தெற்கேயிருந்த ஸ்பானியக் குடியேற்றங்களும் ஆங்கிலேயருக்குச் சொந்தமாயின.

**8. போர்த்துக்கேயர் அமெரிக்காவில் குடியேற்றம் அமைக்கவில்லையா?**

போர்த்துக்கேயர் அமெரிக்காவில் ஆக பிரேசிலில் மாத்திரம் ஒரேயொரு குடியேற்றத்தை அமைத்துக் கொண்டனர்.

**9. 16 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட சமய சீர்திருத்தங்களை சுருக்கமாக விபரிக்க.**

(அ) கிறிஸ்தவ திருச்சபையானது கடவுளின் பெயரால் செய்த துர்க்காரியங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் சமயசீர்திருத்தங்கள் எனப்படும்.

(ஆ) மதச்சீர்திருத்தம் 3 பிரதான நோக்கங்களைக் கொண்டது. அவை:

(1) சமய ஊழல்களை ஒழித்து கிறிஸ்தவ திருச்சபையின் புனிதத்தைப் பேணல்.(2) பாப்பாண்டவரின் உண்ணாட்டுத் தலையீடுகளை நீக்கல். (3) கிறிஸ்தவ திருச்சபை சேகரித்து வைத்திருந்த திரண்ட செல்வங்களை அபகரிக்க மன்னர்களுக்கிருந்த பேராசை.

(இ) மறுமலர்ச்சியின் விளைவாக கல்விமான்கள் சமய ஊழல்களைச் சுதந்திரமாக விமர்சித்தனர். ஜோன் வைக்லீப் என்பார் லத்தீன் மொழியிலிருந்த பைபிளை இலகு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மக்கள் அனைவரும் அறிய வழி வகுத்தார்.

(ஈ) பாப்பாண்டவரும் போதகர்களும் நிலபுலன்களைச் சேர்த்திருந்தனர். குடும்பம் நடாத்தினர். சமய வழக்குகளை நடாத்த இலஞ்சம் பெற்றனர். செல்வந்தர்களுக்குப் பட்டம் பதவிகளை விற்றனர். இவற்றை ஜோன் வைக்லீப், ஜோன் கஸ், ஜோன் கெல்வின், மார்ட்டின் லூதர், உல்ரிச் சுவிங்லி முதலானோர் கிறிஸ்தவ சபையின் முறைகேடுகளை விமர்சித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) இக்கால கட்டத்தில் ஐரோப்பாவில் தேசிய அரசுகள் உருவாகிக் கொண்டிருந்தன. திருச்சபையின் தலையீடு இந்நாடுகளின் பொருளாதார கட்டமைப்பிற்குத் தடையாக இருந்தது. ஆதனால் மன்னர்கள் சீர்திருத்தவாதிகளை ஆதரித்தனர்.

(ஊ) சமயசீர்திருத்தமானது ஜேர்மனியில் ஆரம்பமாகியது. மார்ட்டின் லூதர் அதற்குத் தலைமை வகித்தார். இம்முயற்சி புரட்டஸ்தாந்து என்றழைக்கப்பட்டது. பாப்பாண்டவரின் தலைமையில் இயங்கி வந்த கிறிஸ்தவ திருச்சபை தனது பெயரை ரோமன் கத்தோலிக்க திருச்சபை என மாற்றிக் கொண்டது. கிறிஸ்தவ சமயம் பிரிவுற்றது. கத்தோலிக்கத்துக்கு எதிராகப் புரட்தாந்து சமயத்தில் பலர் இணைந்து கொண்டனர்.

(எ) அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய நிலை பாப்பாண்டவருக்கு ஏற்பட்டது. அதனால் ரென்ற் மாநாடு பாப்பாண்டவரால் கூட்டப்பட்டது. நெறி தவறிய போதகர்கள் மதத்திலிருந்து நீக்கப்பட்டனர். போதகர்களைப் பைபிளின்படி நடந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டது.

(ஏ) இக்னேசியஸ் லோயலா என்பவரின் தலைமையில் கத்தோலிக்க மதத்தைப் போதிக்க மிஷனரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

**10. ஐரோப்பாவில் தேசிய அரசுகள் உருவாகியமையை விபரிக்க.**

(அ) குறித்ததேச எல்லைகளைக் கொண்ட சுயாதீன, அதிகாரமுள்ள, சுதந்திரமான ஓர் அரசியல் அலகைத் தேசிய அரசு என்பர். ஐரோப்பியாவில் பின்வருவனவற்றில் ஏற்பட்ட மறுமலர்ச்சி தேசிய அரசுகள் தோன்றக் காரணமாகியது:

1. மறுமலர்ச்சி தோன்றுவதற்கு முன்னர் நாடுகளில் மானிய முறைமை நிலவியது. முன்னர்களிலும் பார்க்க பாப்பரசரும் போதகர்களும் செல்வாக்குடையவர்களாக இருந்தனர். மன்னனின் அதிகாரம் பெரிதும் கட்டுப்பட்டிருந்தது.

2. மறுமலர்ச்சியின் பின்னர் சிலவிடயங்கள் காரணமாக பிரதேச ஆட்சி அலகுகள் அனைத்தும் ஒரே ஆட்சியின் கீழ் ஒன்று படுத்தப்பட்டன. பரம்பரையாக நிலங்களை வைத்திருந்த வம்சத்தலைவர்களின் செல்வாக்குக் குறைந்தது.

3. நாடுகாண் பயணங்களால் வியாபாரம் மேலோங்கியது. பணப்புழக்கம் அதிகரித்தது.

4. சமயச்சீர்திருத்த இயக்கங்கள் காரணமாக பாப்பரசரினதும் குருமாரினதும் செல்வாக்குக் குறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பயிற்சிகள்**

1.நாடுகாண் பயணங்களைச் சுலபமாக்கியவை:

(அ) திசையறிகருவி (ஆ) வட உடு கணிப்புக்கருவி

(இ) கப்பல்கட்டுந்துறை முன்னேற்றம் (ஈ) இவை அனைத்தும்

2. புதியநாடுகளைக் கண்டு பிடிக்க ஐரோப்பிய நாடுகள் விரும்பியமைக்கான காரணம்:

(அ) அரசியற் காரணம் (ஆ) பொருளாதாரக் காரணம்

(இ) சமயக் காரணம் (ஈ) இவை அனைத்தும்

3. கனடாவின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்த குடியேற்றங்கள்:

(அ) பிரான்சியருடையவை (ஆ) ஸ்பானியருடையவை

(இ) ஆங்கிலேயருடையவை (ஈ) போர்த்துக்கேயருடையவை

4. வட அமெரிக்காவின் கிழக்குக்கரையில் அமைந்த குடியேற்றங்கள்:

(அ) பிரான்சியருடையவை (ஆ) ஆங்கிலேயருடையவை

(இ) ஸ்பானியருடையவை (ஈ) போர்த்துக்கேயருடையவை

5. போர்த்துக்கேயரின் குடியேற்றம் எங்கு அமைந்தது?

(அ) பேரு (ஆ) யுகாற்றன்

(இ) பிரேசில் (ஈ) கனடா

6 ஏகாதிபத்தியங்களின் கீழ் அமைந்த நாடுகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

7 நாடு காண் பயணங்களில் முதன் முதல் ஈடுபட்ட நாடுகள் எவை?

8.போர்த்துக்கேயர் எங்கு தம் குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர்?

9. ஸ்பானியர் எங்கு தம் குடியேற்றங்களை அமைத்துக்கொண்டனர்?

10. சூரியன் அஸ்தமிக்காத நாடு எது?

11. 18,19,20 நூற்றாண்டுகளில் காலனித்துவ ஆதிக்க நாடுகளையும் அவற்றின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களும் எவை எனவும் அட்டவணை ஒன்று தயாரிக்க.

12. கைத்தொழில் புரட்சிக்கு முன்னர் ஏகாதிபத்தியங்களை உருவாக்கிக் கொண்டதன் நோக்கங்கள் யாவை?

13. 1453 இல் துருக்கியர் கொண்சாந்திநோபிளைக் கைப்பற்றியதால் ஏற்பட்ட விளைவுகள் எவை?

14. கைத்தொழிற் புரட்சிக்குப் பின்னர் ஏகாதிபத்தியங்களை உருவாக்கிக் கொண்டதன் நோக்கங்கள் எவை?

15. எமது நாட்டை அடிமை கொண்ட ஐரோப்பியர் யார்?

**(ஆ)**

சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1.போக்குவரத்தின் பொருட்டமைந்த புதிய பாதைகள் எவை?

(அ) சுயெஸ் கால்வாய் (இ) கீல் கால்வாய்

(ஆ) பனாமாக் கால்வாய் (ஈ) இவை அனைத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. தொலைத்தொடர்பு சாதனங்கள் எவை?

(அ) தந்தி (இ) வானொலி

(ஆ) தொலைபேசி (ஈ) இவை அனைத்தும்

3. ஐரோப்பிய வல்லரசுகள்

(அ) பிரித்தானியா (இ) பிரான்ஸ்

(ஆ) ஜேர்மனி (ஈ) அவை அனைத்தும்

4. உலக சமாதானத்தை ஏற்படுத்தத் தோன்றிய தாபனம்

(அ) ஐக்கியநாடுகள் சபை (இ) நோராட்

(ஆ) சர்வதேச சங்கம் (ஈ) உலக வங்கி

5. ஐக்கிய நாடுகள் சபையில் உள்ளடங்குவன

(அ) பொதுச்சபை (இ) சமூகபொருளாதார சபை

(ஆ) பாதுகாப்புச்சபை (ஈ) இவை அனைத்தும்

**(இ)**

1. ஐரோப்பியநாடுகளில் முதலாம் மகாயுத்தத்திற்கு முன்னர் ஏற்பட்ட பிளவுகள் குறித்து குறிப்பிடுக.
2. முதலாம் உலக மகா யுத்தம் எப்படி ஏற்பட்டது?
3. முதலாம் உலக மகா யுத்தத்தின் பேரழிவுகள் எவை?
4. முதலாம் உலக மகா யுத்தம் போன்று மீண்டும் ஏற்படக்கூடாது என்பதற்கு உருவான அமைப்பு என்ன?
5. சமாதான முயற்சிகள் ஏன் தோற்றன?
6. பிரித்தானியாவும் பிரான்சும் எதிர் பார்த்த பிரச்சினைகள் யாவை?
7. இத்தாலியின் மாற்றங்கள் யாவை,?
8. ஹிட்லரின் ஆட்சி குறித்து விபரிக்க.
9. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் உடனடிக் காரணம் யாது?
10. ஐ.நா.சபை ஏன் தோற்றம் பெற்றது

## விடைகள்

1. (ஈ), 2. (ஈ), 3இ (அ), 4. (ஆ), 5. (இ).

6.குடியேற்ற நாடுகள் 7. போர்த்துக்கல்லும் ஸ்பானியாவும்

8. கீழைத்தேசங்களில் 9. அமெரிக்கா 10. பிரித்தானியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 11. அட்டவணை

18, 19, 20 ஆம் நூற்றாண்டுகளில் காலனித்துவ ஆதிக்க நாடுகளும் அவற்றின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களும்

| பேரரசு | 18ஆம் நூற்றாண்டில் ஆளுகைப் பிரதேசங்கள் | 19ஆம் நூற்றாண்டில் ஆளுகைப் பிரதேசங்கள் | 20ஆம் நூற்றாண்டில் ஆளுகைப் பிரதேசங்கள் |
|---|---|---|---|
| பிரித்தானியா | இந்தியாவில் சென்னை, வங்காளம் என்பனவும் ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்றங்கள், பர்மியூடா, பஹாமாஸ் | இந்தியா, பர்மா, மலேஷியா, இலங்கை, கனடா, அவுஸ்ரேலியா, நியூசிலாந்து, சம்பியா, சியாராலியோன், கானா, கேப் குடியேற்றம் | இலங்கை, இந்தியா, பர்மா, மலாக்கா, சியாரலியோன், கானா,நைஜீரியா, உகண்டா, ரொடீஸியா, பொட்ஸ்வானா |
| பிரான்ஸ் | அல்ஜிரியா, மேற்கு ஆபிரிக்காவின் செனகல், நியூசிலாந்து, ஜாவா, சிங்கப்பூர், மலாக்கா, எகிப்து, வியட்னாம், லாவோஸ், சைகோன், கம்போடியா. | அல்ஜீரியா, மேற்கு ஆபிரிக்காவின் செனகல், நியூசிலாந்து, ஜாவா, சிங்கப்பூர், மலாக்கா, எகிப்து, வியட்னாம், லாவோஸ், சைகோன், கம்போடியா, | அல்ஜீரியா, மொரோக்கோ கம்போடியா, மாலி, கொங்கோ, செனகல், கெமரூன். ஷாட், நைஜர் இந்தியாவின் அஸாம். |
| போர்த்துக்கல் | இந்தியாவில் கோவா, பிரேசில் | பிரேசில், இந்தியாவின் கோவா | அங்கோலா, மொசாம்பிக், கினிபிக்ஸ் |
| ஸ்பானியா | | மொறோக்கோ, கெனரி தீவுகள், பிலிப்பைன்ஸ், புளோரிடா, மெக்ஸிகோ | மொறோக்கோ |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. பொருளாதார நோக்கம், அரசியல் நோக்கம், சமய நோக்கம்

13. (அ) வர்த்தகப்பொருட்களின் விலைகள் அதிகரித்தன.
(ஆ) பொருட்கள் மீதான திர்வைகள் அதிகரிக்கப்பட்டன.
(இ) அத்தியாவசியப் பொருட்களை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ள இயலாதிருந்தது.

1. (அ) மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ளல்
(ஆ) சந்தைகளைப் பெற்றுக்கொள்ளல்
(இ) ஐரோப்பியர்களுக்குத் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுத்தல்
(ஈ) புதிய உற்பத்தி முயற்சிகளில் மூலதமனமிடுவதற்கு சந்தர்ப்பங்களைப்பெற்றுக் கொள்ளுதல்

2. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்.

**(ஆ)**

**1 (ஈ), 2 (ஈ). 3. (ஈ), 4. (அ), 5 (ஈ)**

**(இ)**

1. (அ) ஜேர்மனி வல்லரசாக உருப்பெற்றது.
(ஆ) அதிசிறந்த கடற்படையைக் கொண்ட பிரித்தானியா ஜேர்மனிக்கு சவாலாக அமைந்தது.
(இ) 1904 இல் பிரான்ஸ், ரஷ்யா என்பன பிரித்தானியாவுடன் சேர்ந்து கொண்டது.
(ஈ) ஆஸ்திரேலியாவும் இத்தாலியும் ஜேர்மனியுடன் கூட்டுச் சேர்ந்தன
(உ) இரு அணிகள் தோன்றின.

2. ஆஸ்திரேலியாவின் முடிக்குரிய இளவரசனையும் இளவரசியையும் சரஜீவோவில் சேர்பிய இனத்தவன் ஒருவன் கொலை செய்தமையாகும்.

3. (அ) 80 இலட்சம் இராணுவம் மடிந்தது.
(ஆ) 7.7 மில்லியன் மக்கள் கைதாகினர்
(இ) ஐரோப்பிய நாடுகள் கடனாளியாகின.
(ஈ) போரிலீடுபட்ட நாடுகள் பேரழிவைக்கண்டன.

4. சர்வதேச சங்கம்

5. (அ) சர்வதேச சங்கத்தில் எல்லாநாடுகளும் அங்கம் வகிக்கவில்லை. ஜேர்மனி, ரஷ்யா, அமெரிக்கா நாடுகள் இவற்றிலடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) தீர்மானங்களைச் செயற்படுத்துவதில் சட்ட அமைப்பு ஒன்றில்லை.

6. (அ) முதலாம் உலக மகா யுத்தத்தில் இந்த இரு நாடுகளும் பெரும் உயிரழிவும் சொத்தழிவும்.ஏற்பட்டன.

(ஆ) உலகப்பொருளாதாரம் சீரழிந்தது

(இ) ஐக்கிய அமெரிக்கா, ஜேர்மனி, யப்பான் ஆகிய நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சி பிரித்தானியாவுக்குச் சவாலாக அமைந்தது.

(ஈ) பிரான்சில் அரசியல் உறுதியின்மை நிலவியமை

7. (அ) முதலாம் உலகப் போரின் முடிவில் இத்தாலிக்கு எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கவில்லை.

(ஆ) இந்த நாட்டில் வேலையில்லாப் பிரச்சினை அதிகரித்து பொருளாதாரச் சிக்கல்கள் தோன்றின.

(இ) தொழிலாளர் பிரச்சினைகள், வேலையில்லாத் திண்டாட்டம் என்பன ஏற்பட்டன.

(ஈ) பெனிட்டோ முசோலினியின் பாசிச ஆட்சி ஏற்பட்டது.

8. (அ) நாசிச வாதியான ஹிட்லர் ஜேர்மனியின் சர்வாதிகாரியானான்.

(ஆ) ஜேர்மனியரே உலகில் சிறந்தவர் எனக்கூறி இனப்பற்றை ஏற்படுத்தினான்.

(இ) ஜேர்மனியில் விவசாய, கைத்தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தினான்.

(ஈ) ஹிட்லர் படைப்பலத்தை அதிகரித்தான்.

9. ஜேர்மனி போலாந்தை ஆக்கிரமித்தமை அமைந்தது.

10. (அ) உலக சமாதானத்தை உருவாக்க.

(ஆ) சர்வ தேசப் பாதுகாப்பை ஏற்படுத்த.

(இ) நீதி நியாயத்தைப் பேணல்.

(ஈ) சுதந்திரத்தைப் பாதுகாத்தல்

(உ)மனித உரிமைகளை மதித்துப் பேணல்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ndation.
.org

# தரம் 6, 7, 8, 9, 10, 11க்குரிய
# புதிய பாடத்திட்ட நூல்கள்

| | | |
|---|---|---|
| புவியியல் | – | தரம் 6 |
| புதிய புவியியல் | – | தரம் 7 (புதிய பாடத்திட்டம்) |
| புதிய புவியியல் | – | தரம் 8 |
| புதிய புவியியல் | – | தரம் 9 |
| புதிய புவியியல் | – | தரம் 10 |
| புவியியல் | – | தரம் 11 (புதிய பாடத்திட்டம்) |

ஆசிரியர் - பிரியா பாலேந்திரன்

| | | |
|---|---|---|
| வரலாறு | – | தரம் 6 |
| இலங்கு வரலாறு | – | தரம் 7 (புதிய பாடத்திட்டம்) |
| இலங்கு வரலாறு | – | தரம் 8 |
| இலங்கு வரலாறு | – | தரம் 9 |
| இலங்கு வரலாறு | – | தரம் 10 |
| இலங்கு வரலாறு | – | தரம் 11 (புதிய பாடத்திட்டம்) |
| குடியியல் | – | தரம் 7 |

ஆசிரியர் - கமலா குணராசா

அனைத்து நூல்களின் மீள்பார்வை

## கலாநிதி க. குணராசா

கமலம் பதிப்பகம்

கமலம் பதிப்பகம்
75/10A, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org